Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்




மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 24 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷவ்வால் 05 (10.12.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 70

## அதிகாரப்பரவல், மனித உரிமைகள்; 4ஆம் சுற்றுப் பேச்சில் முக்கியத்துவம்!

### செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ்



(கொழும்பு)

புதிய அரசியல் யாப்பு ஒன்றுக்கமைய எதிர்கால அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்- இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர்கள் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தற்போதுள்ள யாப்பில் உள்ள வாசகங்களைத் திருத்துவதற்குப் பதிலாக, புதிய தீர்வுகள் புதிய யாப்பின் மூலம் வழங்கப்படும்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஸ்திரப்படுத்துவது ஒஸ்லோவில் நடந்த மூன்றாவது கூட்டத் தொடரின் நோக்கமாகும். இந்தச் சுற்றுப்பேச்சு வார்த்தைகள் பாரிய வெற்றியளித்திருப்பதாகவும், எதிர்பார்ப்புக்கும் கூடுதலாக சிறந்த பெறுபேறுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்றும் பீரிஸ் அப்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில - (12ஆம் பக்கம் பார்க்க)

## ஹக்கீம் அணியினுள் மீண்டும் கொந்தளிப்பு!

### பஷீர் சேகுதாவூத் ராஜினாமா

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸின் ரவூப் ஹக்கீமின் அணிக்குள்ளேயே புதிய பூகம்பம் வெடித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இக்கட்சியின் உயர்பீடக் கூட்டத்தில் பதில் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட பஷீர் சேகுதாவூத் நேற்றுக்காலையே தனது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஹக்கீமின் அணியில் உள்ள ஐந்து உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகளை கடுமையாக எதிர்த்தமையினாலேயே இவர் பதவி விலகியதாகத் தெரியவருகிறது.

அதேவேளை - நேற்றையதினம் அன்வர் இஸ்மாயில் எம்.பியின் அலுவலகத்துக்கு முன்பாக மக்கள் ஒன்று திரண்டு புதிய நியமனங்களை எதிர்த்துப் போராட்டம் நடத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று நள்ளிரவு கட்சியின் உயர்பீடத்தின்

(12ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் குழுவினருக்கு சுவிஸ் அதிகாரபூர்வ வரவேற்பு!

## மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் முன் இன்று மறியல்!

### ஆர்ப்பாட்டப் பேரணிக்கும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தினமாகிய இன்று, யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தின் முன்பாக மறியல் போராட்டமும் அலுவலகத்தை நோக்கிய ஆர்ப்பாட்டப் பேரணியும் இடம்பெறவுள்ளது.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப்பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் காணாமற்போன தமது உறவுகளின் உண்மை நிலையை வெளிப்படுத்தக் கோரியும், காணாமற்போனோர் சம்பந்தமான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோரியும் இம்மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாண மனிதநேய அமைப்புக்கள் இணைந்து, காணாமற்போனோர் சம்பந்தமான உண்மை

(12ஆம் பக்கம் பார்க்க)

## அந்நாட்டு சமஷ்டிமுறை பற்றி தலைநகர் பேர்னில் பேச்சு

(பேர்னிலிருந்து நந்தன்)

**சுவிற்சர்லாந்து சமஷ்டி அமைப்பைப்பற்றி ஆராய அங்கு சென்ற விடுதலைப் புலிகள் குழுவிற்கு, பேர்ன் விமான தளத்தில் சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சு உத்தியோகபூர்வ வரவேற்பை அளித்ததுடன் - சமாதான முயற்சிகளில் விடுதலைப் புலிகளின் பங்கினையும் வெகுவாகப் பாராட்டியது.**

### விண்ணாணம் விநாசியர்



எதிலயாவது சிண்டு பிடிக்கோணும் எண்டதுதான் அம்மையாற்ற விருப்பம்...

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான குழுவினர் நேற்று ஒஸ்லோவிலிருந்து புறப்பட்டு, சுவிற்சர்லாந்தின் தலைநகர் பேர்ன் மாநகரை வந்தடைந்தனர்.

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா, சட்ட ஆலோசகர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்கேற்ற இக்குழுவை -

பேர்ன் விமானத்தளத்தில் வைத்து - சுவிற்சர்லாந்து வெளிவிவகார அமைச்சின் (Federal Department) அரசியல் விவகாரத் தலைவர் பிளேய்ஸ் கோடெற் (Blaise Godet) வரவேற்றார்.

இந்த உத்தியோகபூர்வ வரவேற்பைத் தொடர்ந்து சுவிற்சர்லாந்தின் வெளிவிவகார அமைச்சில் சந்திப்பொன்று நடைபெற்றது.

சுவிற்சர்லாந்து அரசாங்கத்தின் சார்பில் பீற்றர் மெரெர் (Peter Maurer), ருடோலவ் எஸ்.இம்கூவ் (Rodolphe S. Imhoof) ஆகியோர் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

இதன்போது - அமைதி முயற்சிகளுக்கான தமது ஆதரவை அதிகாரபூர்வமாகத் தெரிவித்துக்கொண்ட சுவிற்சர்லாந்து உயரதிகாரிகள், நோர்வேயின் வெற்றிகரமான மத்தியஸ்தத்துடனான பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் வழங்கி வரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடவேண்டியது அவசியம்

### இந்திய வெளியுறவுச் செயலரிடம் சந்திரிகா

(கொழும்பு)

இந்தியா - சமாதான வழிமுறையில் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதை ஆதரிக்கிறது. தீர்வு அனைத்துத் தரப்பினரதும் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் ஜனநாயகம், பன்மைவாதம், மனித உரிமை என்பனவும் மதிக்கப்படல் வேண்டும் என இந்திய வெளியுறவுச் செயலர் கன்வால் சிபாலின் இலங்கை விஜயத்தையொட்டி நேற்று இந்தியத் தூதரகம் வெளியிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிபால் நேற்று தனது விஜயத்தை முடித்துக் கொண்டு கொழும்பிலிருந்து இந்தியா புறப்பட்டார். அவரின் விஜயத்தின் இரண்டாம் நாளான நேற்று- பிரதமர் ரணில், ஜனாதிபதி சந்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவின் பிரசன்னம்; அறிவதில் சிபால் கரிசனை

தமிழ்க் கட்சியினரைக் கொழும்பில் சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் கன்வால் சிபால் சமாதான முயற்சிகளில் அமெரிக்காவின் தீவிர ஈடுபாடு பற்றிக் கேட்டறிந்துள்ளார்.

ஞாயிறன்று மாலை கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடந்த இச்சந்திப்பில் சமாதான முயற்சி தொடர்பில் இந்தியாவுக்கு உள்ள அச்சத்தினை கன்வால் சிபால் வெளியிட்டார்.

சமாதான முயற்சியினைப் பயன்படுத்தி அமெரிக்கா, இலங்கையில் கால்பதிக்கும் நிலை ஏற்படுமா? திருகோணமலையில் தளம் அமைக்கும் நிலை ஏற்படுமா? எனவும் இந்திய வெளியுறவுச் செயலர் தன்னைச் சந்தித்த தமிழ்க் கட்சித் தலைவர்களிடம் கேட்டதாகவும் தெரியவருகின்றது.

## நாடாளுமன்ற பார்வையாளர் பகுதியில் வெளிநாட்டு ராணுவ ஆலோசகர்கள்!

### சபையில் எதிர்க்கட்சியினர் ஆட்சேபம்

(கொழும்பு நிருபர்)

அரசின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான வெளிநாட்டு ஆலோசகர்கள் குழுவைச் சேர்ந்த இருவர் நேற்று நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சுக்கான வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் மீதான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சமயம், மேற்படி வெளிநாட்டுப் பாதுகாப்பு ஆலோசகர்களும் நாடாளுமன்றத்தில் பிரசன்னமாயிருந்தனர். இவ்விடயம் நாடாளுமன்றத்தில் நேற்றுப் பெரும் சர்ச்சையை உருவாக்கியது.

கேணல் பிலிப் வில்சன், கலாநிதி கிறிஸ் ஸ்மித் என்ற இரு வெளிநாட்டுப் பாதுகாப்பு ஆலோசகர்களும், நாடாளுமன்ற அமர்வு நடைபெற்ற சமயம் அரசாங்க அதிகாரிகள் அமரும் பகுதியில் அமர்ந்திருந்தனர். இவர்களுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும் அருகே அமர்ந்திருந்தார்.

விவாதத்தின் ஆரம்பத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

நாளைய மாணவர் அரங்கில்
கொழும்பின் பிரபல ஆசிரியர்
வி.என்.எஸ்.உதயச்சந்திரன் தரும்
தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை
வினாத்தாள் - ஆரம்ப வழிகாட்டலிலிருந்து...

# நாகப்பா எவ்வாறு இறந்தார் கர்நாடக அரசு விசாரணை!

## தமிழ்நாட்டுக்குச் சம்பந்தமில்லை என ஜெயலலிதா மறுப்பு



(பெங்களூர்)

நாகப்பா துப்பாக்கிக் குண்டு பட்டு இறந்தாரா? என்பது பற்றி விசாரணை நடத்தப்படுமென்று கர்நாடக அரசு அறிவித்துள்ளது.

நாகப்பா இறந்த சம்பவத்தைத் தொடர்ந்து கர்நாடக உயர்மட்டக் குழு, உள்துறை அமைச்சர் மல்லிகார்ஜுன் கார்கே தலைமையில் கூடி ஆலோசித்தது. கூட்டம் முடிந்த பிறகு கார்கே நிருபர்களிடம் கூறியதாவது-

நாகப்பாவின் உடல் மைசூரில் இருந்து 70 கி.மீ. தொலைவிலுள்ள செங்காடி காட்டுப்பகுதியில் நேற்று முந்தினம் மாலை கண்டெடுக்கப்பட்டது. நாகப்பா துப்பாக்கிக் குண்டு பாய்ந்து இறந்தாரா? உடல்நலக் குறைவினால் இறந்தாரா என்பது பற்றி அறிய விசாரணை நடத்தப்படும். நாகப்பாவின் உடல் காமகரேயில் உள்ள அவரது பண்ணை வீட்டிற்கு எடுத்துச்செல்லப்பட்டுள்ளது. அங்கு பிரேத பரிசோதனை செய்யப்படும். அதன் பிறகு இறுதிச்சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நடத்தப்படும்.




கர்நாடக அதிரடிப்படையினர் ஏற்கனவே தங்கள் தேடுதல் வேட்டையைத் தொடங்கி விட்டனர். வீரப்பனைப் பிணமாகவோ, உயிருடனோ பிடிக்க அரசு உறுதி கொண்டுள்ளது என்றார் கார்கே.

வீரப்பனுடன் தமிழக அதிரடிப்படை நடத்திய துப்பாக்கிச் சண்டையால்தான் நாகப்பா இறந்தாரா? என்று கேட்டதற்கு, தமிழக அதிரடிப்படை துப்பாக்கிச் சண்டை நடத்தவில்லை என்று தமிழக அரசு உறுதியாகக் கூறியுள்ளது. அவர்கள் சொல்வதை நம்பக்கூடிய நிலையில்தான் உள்ளோம். ஆனால் முழு விசாரணை மட்டுமே உண்மையை வெளிக் கொண்டுவரும் என்றும் அவர் சொன்னார்.

வீரப்பன் பிடியில் நாகப்பா சிக்கித் தவிப்பது பற்றித் தகவல்கள் எதுவும் தெரியாமல் இருந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு நாகப்பா கொல்லப்பட்டு விட்டதாக சத்தியமங்கலம் காட்டுப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் அது உண்மையல்ல, வதந்திதான் என்று கூறப்பட்டது. ஆனால் வதந்தி கிளம்பிய அதேநாளில்தான் நாகப்பா கொல்லப்பட்டுள்ளார். அந்த வதந்தி உண்மையாகிவிட்டது.

நாகப்பாவின் கொலை தொடர்பாக தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கருத்து வெளியிடுகையில்,

தமிழக - கர்நாடக கூட்டு அதிரடிப்படை வீரப்பனைத் தேடிக்கொண்டு இருந்தபோது கர்நாடகக் காட்டுப் பகுதியில் இருந்து திரும்பிச்செல்லும்படி தமிழக அதிரடிப்படையை கர்நாடக அரசு முதலில் கேட்டுக் கொண்டது. இதனால் கூட்டு நடவடிக்கை நின்றுபோனது.

தமிழக அதிரடிப்படை முதலில் சுட்டது. வீரப்பன் கும்பல் திருப்பிச் சுட்டது. இப்படி நடந்த துப்பாக்கிச் சண்டையில் நாகப்பா உயிரிழக்க நேரிட்டது என்கிற வதந்தியை இப்போது சில தீய சக்திகள் பரப்புவது துரதிர்ஷ்டவசமானதாகும். இது முற்றிலும் பொய்.



கர்நாடகக் காட்டுப்பகுதிக்குள் தமிழக அதிரடிப்படை எந்தக் காரணத்தைக் கொண்டும் செல்லவில்லை. நாகப்பா கொல்லப்பட்ட சம்பவம் தமிழகப் பகுதியைவிட்டு 40 கி.மீ. உள்ளே கர்நாடக எல்லைக்குள் நடந்திருக்கிறது. இதில் தமிழக அதிரடிப்படைக்கு எந்தவகையிலும் சம்பந்தம் இல்லை. துரதிர்ஷ்டவசமாக கெட்ட விஷயம் இப்போது நடநது விட்டது என ஜெயல்லிதா தெரிவித்தார்.


### வரவேற்கின்றோம்

எமது பிரதேசத்துக்கு நிரந்தரச் செயலரை நியமனம் செய்து மக்கள் செயற்பாடுகளுக்கு உடன் தீர்வு காண உதவிய செயற்பாட்டை வரவேற்று, யாழ். மாவட்டச் செயலருக்கு நன்றி கூறுகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
கட்டைவேலி - நெல்லியடி
ப.நோ.கூ.சங்கம்.

கரவெட்டி.
09-12-2002 (சி-294)



நிறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், சூர்யா, கௌசல்யா நடித்த
நேருக்கு நேர்
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே)



ராஜா யாழ்ப்பாணம்.

ஆறாவது வெற்றி வாரமாக
10.30, 2.30
வில்லன்
7.30, 9.30
JEAN CLAUDE VANDAMME இன்
BLACK EAGLE
(சி-151)


# 14ஆம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
28
12
1960



வீரச்சாவு
10
12
1988

மதி.....
நீ எம் உணர்வோடு கலந்தாய்!
உயிர் அரணாய்த் திரிந்த
காலவங்களின் நினைவில்
எம் இதயம் கசிகிறதே!
வாழ்ந்தாய் நீ
வரலாறாய்!
வானமெட்டும் உன்
வீரமும் ஈகமும்
வாழ்வதன் அர்த்தம் சொல்லும்!
வீழ்ந்தவன் நீயல்ல
விதையானவனே!
உன் நினைவில்
கலக்கின்றோம்
நிலையான இலட்சியங்களுடன்!

*தெல்லிப்பளை, அளவெட்டி,*
*மல்லாகம் வாழ் மக்கள்.*

## யாழ். பிராந்தியத் தளபதி
# லெப். கேணல் மதி
### சுப்பிரமணியம் பாலச்சந்திரன்
### தெல்லிப்பளை - மல்லாகம்

ஒரு உயிர் உன்னதமானது என்பதை நான் அறிவேன்; ஆனால் உயிரிலும் உன்னதமானது; எமது உரிமை எமது சுதந்திரம் எமது கௌரவம்.

வே.பிரபாகரன்,
தமிழீழத் தேசியத் தலைவர்.

(சி-292)

# அவுஸ்ரேலியாவின் பிரதம நீதியரசர் வன்னியில் புலிகளைச் சந்திப்பார்!

(கொழும்பு நிருபர்)

அவுஸ்ரேலியாவின் பிரதம நீதியரசர், வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அமைச்சர் பெ.சந்திரசேகரனின் அழைப்பின் பேரில், அவுஸ்ரேலிய பிரதம நீதியரசர் மாக்கஸ் என்பீல்ட் இலங்கை வந்துள்ளார். நேற்று அதிகாலை 3 மணியளவில் இவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவதற்காக வன்னிக்கும் செல்லவுள்ளார். அத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, உயர் நீதிமன்ற நீதியரசர்கள், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள அமைச்சர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், நாடாளுமன்ற ஆளாட்சி அதிகாரி மற்றும் வர்த்தகப் பிரமுகர்களையும் இவர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

விசேடமாக, வன்னி மற்றும் மலையக மக்களின் வாழ்க்கை நிலை, மனித உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பாக அவுஸ்ரேலிய பிரதம நீதியரசர் தமது விஜயத்தின்போது அதிக கவனத்தைச் செலுத்துவார். அமைச்சர் சந்திரசேகரன் அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற 'பொங்குதமிழ்' நிகழ்வில் கலந்துகொள்ளச் சென்றிருந்தபோது, அவுஸ்ரேலிய பிரதம நீதியரசரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

## தொழில்நுட்ப பயிற்சி முடித்தோருக்கான கருத்தரங்கு

யாழ்.தொழிநுட்பக் கல்லூரி, மற்றும் சென்.பற்றிசியன் தொழிநுட்ப நிலையத்தில் தொழிற் பயிற்சியை முடித்து வெளியேறியோருக்கான கருத்தரங்கு எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிலையங்களில் தொழிற்பயிற்சிகளை முடிவுத்தவர்கள், இதில் தவறாது கலந்துகொள்ளும்படி வவுனியா, கனேடிய உலகப் பல்கலைக்கழகச் சேவை மாவட்ட இணைப்பாளர் கேட்டுள்ளார்.

## கடுவெல பிரதேசசபை உறுப்பினர் பாதாள உலகத்தினரால் கொலை!

(கொழும்பு நிருபர்)

கடுவெலப் பிரதேச சபையின் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு 9.45 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. நவகமுவ - ஹேவா ஹெட்ட என்ற இடத்திலேயே இத் தாக்குதல் நடந்தது. துப்பாக்கி நபர்கள் இவரை சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

உயிரிழந்த பிரதேசசபை உறுப்பினரின் உடலில் 16 துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தக் கொலைக்கு பாதாள உலக கோஷ்டியினரே காரணம் எனவும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட, பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதேச சபை உறுப்பினரின் சகோதரருக்கும் பாதாள உலக கோஷ்டி ஒன்றுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையில் அமைதி திரும்பினால் சுவிஸ் தமிழர்கள் மீளத் திரும்புவர்!

### சுவிஸ் அகதிகள் அலுவலக அதிகாரி கூறுகிறார்

(ஜெனிவா)

இலங்கையில் அமைதியான சூழ்நிலை ஒன்று வருமானால் சுவிற்சர்லாந்து நாட்டில் தங்கியுள்ள 36 ஆயிரம் இலங்கைத் தமிழர்களில் குறிப்பிட்டளவானோர் தாமாகவே நாடு திரும்புவார்கள் என எதிர்பார்ப்பதாக அந்நாட்டு அகதிகளுக்கான அலுவலகப் பிரதிநிதி ஊர்ஸ் வொன் அர்ப் தெரிவித்துள்ளார்.

தற்போதைய சமாதான முயற்சிகளால் இல்ங்கையில் ஏற்பட்டு வரும் அமைதிச் சூழல் தொடர்பாகக் கருத்துவெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சுவிற்சர்லாந்து நாட்டில் 36 ஆயிரம் இலங்கைத் தமிழர்கள் வசிப்பதாகவும் இவர்களில் 27 ஆயிரம் பேர் சுவிஸ் கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பதாகவும் தெரிவித்த அவர் - மேலும் 8 ஆயிரம் பேர் அரசியல் புகலிடம் கோரி விண்ணப்பித்துள்ளதாகவும் ஆயிரம் பேர் அகதிகள் நிலையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - சுவிஸில் உள்ள இலங்கைத் தமிழ் மக்கள் நாடு திரும்பக்கூடிய சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை என்று அங்குள்ள தமிழ் அமைப்புத் தலைவர் அன்ரன் பொன்ராஜா கருத்து வெளியிட்டுள்ளார்.

முற்றிலும் வித்தியாசமான சூழலில்தான் இப்போது பேச்சுக்கள் நடக்கின்றன. சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றாலும், சுவிஸில் இருந்து இலங்கையர்களைத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலை உருவாகவில்லை. சுவிஸில் உள்ள தமிழ்மக்கள், இங்குள்ள மக்களின் வாழ்வுடன் இணைந்து போயுள்ளனர். இவர்களை உடனடியாக மீளத்திருப்பியனுப்ப முற்பட்டால் அவர்களின் வாழ்க்கை முறைகளில் குழப்பம் ஏற்படும்.

எனவே, சுவிஸில் இருந்து இலங்கைத் தமிழ் மக்களை மீளத் திருப்பி அனுப்பக் கூடாது என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## சுவிஸ் சென்றுள்ள புலிகளின் குழுவில் மகேஸ்வரன், உருத்ரகுமாரன் இணைவு

(ஒஸ்லோ)

சுவிற்சர்லாந்து சமஷ்டி முறைமை குறித்துக் கலந்தாலோசனைகளை மேற்கொள்ள அங்கு சென்றுள்ள புலிகளின் குழுவில் ஜோய் மகேஸ்வரன் மற்றும் உருத்திரகுமாரன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தலைமையிலான இக்குழுவில் சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா ஆகியோர் இடம்பெறுவதாக முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன. இக்குழுவிலேயே மேற்படி இருவரும் இணைந்து கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை, தற்போது சுவிற்சர்லாந்து சென்றுள்ள தமிழ்ச்செல்வன், கருணா ஆகியோர் வன்னிக்குத் திரும்ப முன்னர், லண்டனுக்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.




அண்மையில் மக்கள் வங்கியின் ஆதரவில் 'நமது ஈழநாடு' நடத்திய க.பொ.த. சாதாரணதர மாணவர்களுக்கான பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கில் பாட விளக்கங்களை அளித்த ஆசிரியர்களுக்கு மக்கள் வங்கி குடைகளை அன்பளிப்புச் செய்தது. மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் சிவபாதவிருதையர் மாணவர் மலர் இணைப்பாளரான, ஆசிரியர் சுதர்சனுக்கு குடைகளை அன்பளிப்பாக வழங்குவதைப் படத்தில் காணலாம்.

## வட-கிழக்குப் புனரமைப்புக்கு உலக வங்கி ரூ. 297 கோடி!

(கொழும்பு நிருபர்)

வட-கிழக்கு அபிவிருத்திக்கு உலகவங்கி 297 கோடி ரூபாவை உதவியாக வழங்க முன்வந்துள்ளது. போரினால் பாதிக்கப்பட்டுள்ள வட-கிழக்குப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவே இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

சுகாதாரத்துக்கு எட்டு மில்லியன் டொலரும், நீர் விநியோகத்துக்கு ஐந்து மில்லியன் டொலரும், வாழ்வாதாரப்பிரச்சினைகளைத் தீர்க்க பத்து மில்லியன் டொலரும், புனரமைப்புப் பணிகளுக்கு எட்டு மில்லியன் டொலரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த நிதி உதவி உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சினூடாக வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# அதிரடிப்படை முகாம் அமைப்பதற்காக கச்சான் பயிர்கள் புல்டோசரால் அழிப்பு!

### அம்பாறை மாவட்டம் கோமாரியில் சம்பவம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் கோமாரி என்ற இடத்தில், விசேட அதிரடிப் படையினர் புதிய முகாம் ஒன்றை அமைப்பதற்காக, 3 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டிருந்த கச்சான் பயிர்களை புல்டோசர்கள் மூலம் அழித்துள்ளதாக, யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

கோமாரிப் பகுதியில், மேட்டு நிலத்தில் 3 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த இநதக் கச்சான் பயிர்களே, புல்டோசர்கள் மூலம் விசேட அதிரடிப் படையினரால் அழிக்கப்பட்டுள்ளன. கஜேந்திரன் என்ற விவசாயி, நியாப் திட்டத்தின் கடனுதவி மூலம் இப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்தார்.

விசேட அதிரடிப் படையினர் திடீரென எந்த முன்னறிவித்தலும் கொடுக்காமல், கச்சான் பயிர்களை புல்டோசர் மூலம் அழித்ததால், இவ் விவசாயிக்கு சுமார் 2 இலட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.

அதிரடிப் படையினரின் அத்து மீறல் தொடர்பாக, அம்பாறை மாவட்டப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இதுதொடர்பாக அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேரு, அம்பாறை பொலிஸ் அத்தியட்சகரிடம் தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

### பண்டிகைக் காலத்தை முன்னிட்டு

## நடமாடும் வர்த்தக சேவையினை 'சதொச' நாடெங்கும் ஆரம்பித்தது!

(கொழும்பு நிருபர்)

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட வர்த்தக வசதிகளை ஏற்படுத்தியுள்ளதாக வர்த்தக, நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, நேற்றுமுதல் நாடு முழுவதும் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் நடமாடும் வர்த்தக நிலையச் சேவையை ஆரம்பித்துள்ளது. 50 முதல் 60 வாகனங்களில் இந்த நடமாடும் வர்த்தசேவை நடத்தப்பட்டு வருகின்றது.

இதேவேளை, பண்டிகைக் காலத்தில் தேங்காயின் விலையுயர்வைக் கட்டுப்படுத்துவதற்காக தேங்காயின் விலை ரூ.14.95 ஆக, கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் நிர்ணயித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் காங்கிரஸ் உயர்மட்டக் கூட்டத்தில் கட்சியிலிருந்து அதாவுல்லா அதிகாரபூர்வ நீக்கம்!

(கொழும்பு நிருபர்)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உயர்பீடம் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் நடத்திய கூட்டத்தில், அதாவுல்லா உள்ளிட்ட ஐந்து உயர்பீட உறுப்பினர்களை அப்பதவியிலிருந்து நீக்குவதற்குத் தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 11 மணிக்கு, அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் ஆரம்பமான இந்த உயர்பீடக் கூட்டம், நேற்று அதிகாலை 3 மணிவரை நீடித்தது. இந்த உயர்பீடக் கூட்டத்தில் புதிய நியமனங்கள் பல செய்யப்பட்டதுடன், சிலரைப் பதவியில் இருந்து நீக்குவதற்கும் முடிவு செய்யப்பட்டது.

அதாவுல்லா தலைமையில் பிளவுபட்டு - தனி அணியாக நிற்கும் - உதுமான் லெப்பை, ஏ.எல்.எம்.ஹவ்ரத், சுபைர்தீர், ஏ.எல்.எம்.முஸாமில் ஆகியோரை கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள் பதவிகளில் இருந்து நீக்க இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, புதிய உயர்பீட உறுப்பினர்களாக எச்.எம்.எம். ஹாரீஸ், கே.எம்.தௌபிக், ரிசாத் பதியுதீன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். கட்சியின் பிரதித் தலைவராக பரூக் மஜீத்தும், மூத்த துணைத்தலைவராக அப்துல் மஜீத்தும், தற்காலிகப் பொதுச் செயலாளராக பஷீர் சேகு தாவூத்தும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். பேராளர் மாநாட்டில் பொதுச்செயலாளர் பதவியை அம்பாறை மாவட்ட கட்சி முக்கியஸ்தருக்கு வழங்குவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

## முஸ்லிம் காங்கிரஸ் பிளவுக்கு வெளிச் சக்திகளே காரணம்!

### புத்தளத்தில் ரவூப் ஹக்கீம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளுக்கு வெளிச்சக்திகள்தான் காரணம் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நெருக்கடிக்கு கட்சிக்குள் இருக்கும் முக்கிய பிரச்சினைகள் காரணமாக குறிப்பிட முடியாது என்றும் குறிப்பிட்டார்.

புத்தளத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்- சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசை தனிப்பட்ட கட்சியாக மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களே தவிர, அதிகாரம் செலுத்தும் கட்சியாக அதை அங்கீகரிக்கவில்லை. நாட்டினதும், முஸ்லிம் மக்களினதும் நன்மை கருதி சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கோரிக்கைவிட்டார்.

# கனேடிய சமூகக் கட்டமைப்புப் பின்புலத்தில் அதன் சமஷ்டி அரசியல் அமைப்புக்கள்



கனடாவின் தேசியக் கொடி

## சுயநிர்ணயம் - ஒரு பார்வை

பகுதி 11

**வேலும்மயிலும் சேந்தன்**

இவ்வாரத்தில் இருந்து சுயநிர்ணயம் - ஓர் பார்வை என்ற கட்டுரைத் தொடரில் உலகிலுள்ள சமஷ்டி முறைமையைத் தன்னகத்தே கொண்டுள்ள நாடுகளின் அரசியல் திட்டங்களில், அவற்றின் சமூகப் பொருளாதார கட்டுமானத்திற்கு ஏற்றவகையில் எவ்வாறு சமஷ்டி முறைமை உள்வாங்கப் பட்டுள்ளது என்பது பற்றி ஆராயவுள்ளோம்.

உலகின் முதலாவது சமஷ்டி முறைமையைக் கொண்டமைந்த நாடு என்ற வகையில் ஐக்கிய அமெரிக்க நாட்டினையே நாம் முதலில் பார்க்க வேண்டும்.

*''ஐக்கிய அமெரிக்க மக்களாகிய நாம், ஒரு பூரணமான கூட்டாட்சியை உருவாக்குவதையும், நீதியை உருவாக்குவதற்காகவும், ஜனநாயக சம்பிரதாயங்களைப் பேணிப் பாதுகாப்பதற்காகவும், பொதுவான பொதுநலனை முன்னேற்றுவதற்காகவும், எமக்குச் சுதந்திரத்தை நாமே அளித்துக் கொள்வதற்காகவும், இந்த அரசியல் யாப்பினை ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்குகிறோம்.''*

- என ஆரம்பிக்கும் அமெரிக்க சமஷ்டி அரசியல்திட்டம், 4000 சொற்களைக் கொண்ட முதலாவது சமஷ்டி முறையிலான அரசியல் திட்டமாகும். இந்த வகையில், பதினமூன்று ஆரம்பக் குடியேற்றங்கள் தமது பாதுகாப்பு, பொருளாதாரம் ஆகியவற்றை முன்னெடுக்க ஒன்றிணைந்து சமஷ்டியை உருவாக்கியமை அமெரிக்க சமஷ்டி முறைமையாகும்.

ஆனால், ஒன்றிணைந்து செயற்பட்ட அல்லது வரையறுத்த புவியியல், அரசியல் எல்லைகளுக்குள் இருநத மாநிலங்கள்- மேலும் தம்மை ஸ்திரப்படுத்த, முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள, மொழி மற்றும் மதம் தொடர்பான கலாசாரப் பன்மைத்துவத்தினை ஏற்றுக் கொள்ளத் தக்கவகையில் உருவாகிய, சமஷ்டி முறைமையே கனேடிய சமஷ்டி முறைமையாகும் இக்கனேடிய சமஷ்டி முறையானது, 1867 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது ஒரே நாட்டிற்குள்ளிருந்து சமஷ்டிக் குடியரசுகளை உருவாககிய- முதலாவது சமஷ்டி அரசியல் திட்டம் என்பதனால் - எமது தற்பொழுதுள்ள தேவைப்பாடு கருதி, அமெரிக்க சமஷ்டி முறைமைக்கு முன்னர், கனேடிய சமஷ்டி முறைமையைக் இக்கட்டுரைத் தொடரிலே இன்று தொடக்கம் பார்ப்போம். மேலும், கனேடிய சமஷ்டியிலேயே சமஷ்டி முறைமையானது- இனத்துவ முரண்பாடுகள் மற்றும் வேறுபாடுகளுக்கப்பால், தனது அரசியல் திட்டக் கருத்தாடல்கள் மூலம், 135 ஆண்டுகளுக்குத் தாக்குப்பிடித்து வருகின்றது என்பதால், இலங்கைக்கும் இவ்வரசியல் முறைமையும் அதன் அரசியல் கலாசாரமும் முன்னுதாரணமாக அமையலாமா....? என்பதனை நாம் பரிசீலிக்கலாம்.

கனடா நாட்டில் முதன் முறையாக சமஷ்டி அமைப்பினை. 1867 இல் உருவாக்கியபோது, இரண்டு வேறுபட்ட சமூகங்கள் முதன்னிலைப்படுத்தப்பட்டன. அதாவது, புரடடஸ்தாந்து மதத்தினைப் பின்பற்றும் ஆங்கிலமொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒன்ராறியோ( **Ontario**) மாநிலமும்- றோமன் கத்தோலிக்கத்தினை மதமாகப் பின்பற்றும் பிரெஞ்சு மொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கியுபெக் (**Quebec**) மாநிலமும் ஆகும்.

*இந்த வகையில் ஆரம்பத்தில் கனேடிய சமஷ்டி முறைமையானது - சமஷ்டிக் கோட்பாடுகளின் அடிபபடையில் - மாநில சுயாட்சியையும அரசியல் திட்ட வரையறையின் அடிப்படையில், மத்தியிலுள்ள ஆட்சியில் கூட்டுப் பொறுப்பினையும் கனேடிய மக்களுக்கு வழங்கியது.*

இக்கனேடிய முறைமையைப் பின்பற்றி- பின்வந்த காலங்களில் இந்தியா, மலேசியா, தென்னாபிரிக்க அரசியல் திட்டங்கள் வரையப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால், பின்வந்த காலப் பகுதியில் குறிப்பாக, இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர், மத்திய அரசாங்கத்திற்கு அரசியல் திட்டம் அளித்திருந்த கட்டுப்பாடுகளை அல்லது வரையறைகளை கட்டுப்படுத்த வேண்டியதாக, மாநில சுயாட்சியை, உலகின் சர்வதேச அரசியல் உறவுகள்- கனேடிய அரசாங்கத்திற்கு அழுத்தம் தந்தன.

இவ்வாறான காலவோட்டத்திற்கு மத்திய அரசின் கட்டுப்பாடுகளை கட்டுப்படுத்தச் சாதகமாக- தாராளவாதச் சிந்தனை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு, விடயத்தினைப் பேசித்தீர்க்கும் பகுவம் என்பவற்றை கனேடிய மக்களுக்கு அந்நாட்டு அரசியல் கலாசாரம் ஊட்டியிருந்தது, என்பதே இங்கு முக்கியமானதாகும். இதனால், கனேடிய மக்கள் இலங்கையைப்போல் இனமுரண்பாட்டால் வேதனை அடையவில்லை எனலாம்.

இவ்வாறான பின்புலத்திலே கனேடிய சமஷ்டியின் மிகப்பிரதானமான சிறுபான்மையினராக கியுபெக் மக்கள் - மொத்த சனத்தொகையின் 25 சதவீதமாக இருந்தனர். அவ்வாறு இருந்த பிரதான சிறுபான்மையினருக்கு முதன் முறையாக சமஷ்டிக் குடியரசிற்குள் பாராளுமன்றத்தினை அமைத்து சட்டவாக்கத்தினை செய்யக்கூடிய அதிகாரத்தினை- கனேடிய சமஷ்டி அரசியல் திட்டம், அளித்ததென்பது பெருமைக்குரிய விடயமாகும்.

கனேடிய சமஷ்டிக்குப் பின்னரே அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஜேர்மனி, இந்தியா, மலேசியா, ஸ்பெயின் மற்றும் தென்னாபிரிக்கா போன்ற சமஷ்டிகள், தமது குடியரசுகளுக்குச் சட்டவாக்க நிறுவனமான பிராந்தியப் பாராளுமன்றத்தினை அளித்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விடத்தில் வைத்து மேலும் ஒன்றை நாம் கூறவேண்டும்- அதாவது, கடந்த மூன்று தசாப்த காலமாக, கனேடிய அரசாங்கம்- இனத்துவ முரண்பாடுகள், பெரும்பான்மை - சிறுபான்மை முரண்பாடுகள், மதரீதியான முரண்பாடுகள் மற்றும் விளிம்பு நிலை மக்களாகிய ஆதிவாசிகள் ஆகியோரது அரசியல், பொருளாதார, சமூக விடயங்களை பேச்சுவார்த்தை மேசையில் வைத்துப் பேசிவருவதாகும். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வாக -அரசியல்திட்டங்களையும், முன் மொழிவுகளையும், சரத்துக்களையும் முன்வைத்து, பெரும்கருத்தாடலுக்கு இடமளித்தது மட்டுமன்றி, அவற்றை நடை முறைப்படுத்திய பெருமை கனேடிய சமஷ்டிக்கும் அதன் மக்களுக்குமே உண்டு. இன்று சர்வதேச அரசியலில் இவ்வாறான பிரச்சினைகளுக்குக் கலந்துரையாடி தீர்வு காணும் முறைமை மிகப் பிரபல்யம் பெற்றுள்ளது. இதற்கெல் லாம் முன்னோடி கனடா நாடே என்பது மறுப்பதற்கல்ல.

### *கனேடிய சமஷ்டி அரசியல் திட்ட முறைமையின் வளர்ச்சிப் போக்குகள்*

கனேடிய சமஷ்டி அரசியல் திட்டமானது 1867 இல் உருவாக்கப்பட்ட போது, மத்திய அரசாங்கமான ஓட்டாவா (**OTTAWA**) மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தும் வல்லமையைக் கொண்டிருந்தது. இதனை



கனடாவின் சமஷ்டி மாநிலங்கள்

விடப் பிரெஞ்சு மொழிபேசும் கனேடியர்களுக்கும், ஆங்கில மொழிபேசும் கனேடியர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் இருந்தன. இந்த வகையில் 135 ஆண்டுகளில் இன்று வரை- மாநில சுயாட்சி என்ற அடிப்படையில் சுகாதாரம், கல்வி, மக்கள் நலன் என்ற மூன்று பிரிவுகளிலும் பூரண அதிகாரங்களை, கனேடிய சமஷ்டி அளித்திருந்தது.

ஆனால், 1960 கள் தொடக்கம் 1970கள் வரை நடைபெற்ற கியுபெக்கின் தேசியவாத எழுச்சியினால், கியுபெக் மாநிலம் தனியாகப பிரிந்து தனியரசினை அமைக்க முற்பட்ட வேளை - அதனைத் தீர்ப்பதற்காக சமஷ்டிக்குடியரசின் சட்டவாக்கச்சபைக்கு - அதாவது, குடியரசு பாராளுமன்றத்திற்கு, கூடுதலான அதிகாரங்களை அளித்ததுடன், நீதித துறைக்கான சுயாதிக்கத்தினை மேலும் விஸ்தரிக்கப்பட்டது.

1982 இல் கனேடிய அரசியல் திட்டத்தில் மேலும் திருத்தச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதனால் சகல மாநிலங்களும் தத்தமக்குரிய இறைமையை கூடுதலாக அனுபவிக்கத் தொடங்கின எனலாம்.

இந்த வகையில் 1982ஆம் ஆண்டு அரசியல் திருத்தச் சட்டங்களிற்கு பிற்பாடு, மிகவும் இயல்பூக்கமுள்ள அரசியல் முறைமையையும் (**Political System**) அரசியல் கலாசாரத்தினையும் (**Political Culture**)- கனடாவின் மத்திய அரசாங்கமான ஓட்டாவா அரசும் மாநில அரசுகளும் அனுபவிக்கின்றன. தற்பொழுது, கனடாவில் மத்திய - மாநில அரசாங்கங்கள் முறையே “தேச நிர்மாணம்” (**Nation Building**) மற்றும் “மாநில நிர்மாணம்” (**Province - Building**) என்ற நோக்கங்களின் அடிப்படையில் நல்லாட்சியினைச் செலுத்தி வருகின்றன. இதனடிப்படையில் தற்பொழுது கனடாவில் தேச ஒருமைப்பாட்டு உணர்வு- சமஷ்டிமுறையின் கீழ் பேணப்படுவதுடன், மாநிலங்கள் தமக்கிடையில் ஆரோக்கியமான போட்டியுடன் பொருளாதார அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றன.

சமஷ்டி மாநிலங்கள் தமக்கிடையே ஒற்றுமைகளுக்குப் புறம்பாக பல வேற்றுமைகளையும் கொண்டிருக்கின்றன. குறிப்பாக, பிரெஞ்சுமொழி பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கியுபெக் மாநிலத்தினை விட, ஆங்கில மொழி பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் ஒன்பது மாநிலங்கள்- தங்களுக் கிடையில் சமஷ்டி அரசினை உருவாக்கியுள்ளன.

இவற்றினை விட, தெற்கேயுள்ள அமெரிக்காவுடனான வியாபாரத் தொடர்புகளையும் பொருளாதார நலன்களையும் நெருக்கமாக கொண்டமைந்த, தென்பகுதி கனேடிய சமஷ்டி அரசுகள் ஒப்பீட்டு. ரீதியில்- வடபகுதி சமஷ்டி அரசுகளை விட, வேறுபாடான பொருளாதார உட்கட்டமைப்பினைக் கொண்டமைந்தவையாகக் காணப்படுகின்றன. இவற்றினை விட, ஒவ்வொரு மாநிலச் சமஷ்டிகளினதும் பொருளாதார அமைப்பும் அதன் உட்கட்டுமானமும் வேறுபட்டதாகும். இந்த வகையில், கனேடிய சமஷ்டியில் ஒவ்வொரு மாநிலமும் தனக்கேயுரித்தான பொருளாதாரக் கட்டமைப்பினைக் கொண்டமைந்த போதும், ஒவ்வொரு மாநிலத்தினதும் பொருளாதார வளங்கள் மூலம் உருவான உயர்குழாத்தினர் (**Elites**) கனேடிய ஒருமைப்பாட்டினைப் பேணுபவர்களாக காணப்படுகின்றனர். கனேடிய உயர்குழாத்தினர் தமக்கிடையே பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளை கனேடிய தேசியத்தில் வைத்துப் பேணுகின்றனர்.

மேலும், வரலாற்று ரீதியிலும் புவியியல் ரீதியிலும்- பாரிய வேறுபாடுகளையும் கனேடிய மாநிலங்கள் கொண்டமைந்துள்ளன. பொதுவாக கனேடிய முழுச் சனத்தொகையானது, 5000 கிலோமீற்றர் நீளமானதும் 200 கிலோமீற்றர் அகலமானதுமான பெருநெடுஞ்சாலைகளை ஒட்டியே அமைந்துள்ளது. இவ்வாறான அமைப்பு மாநில வேறுபாடுகளைக் கடந்து காணப்படுகின்றது.

இவ்வாறே, அத்திலாந்திச் சமுத்திரத்தினை எல்லையாகக் கொண்ட கனேடிய மாநிலங்களில் சில, ஐரோப்பாவுடனான வர்த்தகத்துடனான பொருளாதாரக் கட்டமைப்பினை பிரதானமாகக் கொண்டுள்ளன. அதேபோல், சில கனேடிய சமஷ்டி அரசுகள் தமது சர்வதேச உறவுகளையும், சர்வதேச வர்த்தகத்தினையும் பசுபிக் க[illegible]லினை தளமாகக் கொண்ட மைந்து காணப்படுகின்றன. குறிப்பாக பிரிட்டிஷ் கொலம்பியா இவ்வாறாக அமைந்துள்ளது. இந்த வகையில் ஆசியாவுடனான உறவு பிரிட்டிஷ் கொலம்பியா மாநிலத்திற்கு அதிகமுண்டு.

ஆனால், இவ்வேறுபாடுகள் - கனேடியத் தேசிய ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையவில்லை எனக் கூறிவிடவும் முடியாது. கியுபெக் மாநிலம் தனியரசுக்காக முயற்சித்தபோது-கனேடிய அரசாங்கமானது 1979ஆம் ஆண்டு கனேடிய ஒருமைப்பாட்டிற்கான செயலணிக் குழுவை (**Task Force For Canadian Unity**) அமைத்துச் செயற்பட்டது. இச்செயலணிக்குழுவினது செயற்பாடு, கியுபெக் மாநிலத்தினை விட, ஏனைய 9 மாநிலங்களிலேயே வினைத்திறனுடன் செயலாற்றியது. இச்செயலணிக் குழுவினது பிரதான செயற்பாடானது, பொருளாதார ஒருமைப்பாட்டினையும் பொருளாதார அபிவிருத்தினையும் பிரதானமானதாகக் கொண்டமைந்தது

இதனால், காலகதியில் கியுபெக் மாநிலம் பிரிந்து சென்று தனியரசு அமைக்கும் உரிமையின் பிரகாரம்- மக்கள் தீர்ப்பு கோரப்பட்ட போது , 1982இல் கியுபெக் மக்கள் தமது விருப்பினை தனியரசு அமைக்கும் முடிவிற்கு எதிராக வாக்களித்தமைக்கு இந்த செயலணிக்குழுவின் செயற்றிட்டமே காரணம் எனக் கூறப்படுகிறது. அதாவது கியுபெக் மக்கள்- தமது மாநிலம் தனித்துவிடப்படின் கிடைக்கப்பெறும் பொருளாதார நன்மைகளிலும் பார்க்க, கனேடிய நாட்டின் ஒரு மாநிலமாகத் தொடர்ந்து இருக்குமாயின் கூடுதலான பொருளாதார நன்மைகளைப் பெறும் என நம்பியதால், அவர்கள் பிரிந்து செல்ல விரும்பவில்லை.

அதேபோல், 60கள் மற்றும் 70களில் எழுச்சியடைந்த கியூபெக் தனியரசுக் கோரிக்கையைக் கட்டுப்படுத்த கனேடிய ஒருமைப்பாட்டிற்கான செயலணிக் குழுவினது இன்னொரு செயற்திட்டத்தின் பயனாகவே, வெவ்வேறுபட்ட மாநிலங்களிலிருந்து உருவான உயர்குழாத்தினர் - கனடா என்ற தேசியத்தில், தம்மை இனங்காணவும் நிலைநிறுத்திக் கொள்ளவும் முடிந்தது. ஒவ்வொரு மாநிலத்தினதும் அரசியல் நிறுவனங்களான சட்டவாக்கச்சபையிலிருந்து, ஒவ்வொரு மாநிலத்தினதும் உயர்குழாத்தினர், தம்மை இனங்கண்டு தேசியரீதியில் ஒன்றிணைத்தனர்.

இவ்வாறு, கனேடிய சமஷ்டியில் வேற்றுமைகள் மற்றும் பன்மைத்துவங்கள் பல இருந்தபோதும்- அவற்றினை அங்கீகரித்து, ஏற்றுக்கொண்டு தனக்கேற்ற சமூக அடித்தளத்திற்கு இணைய, கனேடிய சமஷ்டி அரசியல் திட்டம் தன்னைக் காலத்திற்குக் காலம் புதிப்பித்துக் கொள்கிறது. இந்த வகையில் 135 ஆண்டுகள் நிலைபெற்றிருக்கும் அரசியல் திட்டமானது தன்னகத்தே கொண்டுள்ள இயல்புகள் பற்றி அடுத்த வாரம் நாம் பார்ப்போம்.

(பிரதி செவ்வாய்தோறும் தொடரும்)

# ஐஸ்வர்யாராய்



## பொலிவூட்டில் இருந்து ஹொலிவூட்டிற்கு

முன்னாள் உலக அழகி ஐஸ்வர்யாராய் இந்திய திரையுலகில் முன்னணி நடிகையாக உள்ளார். அவர் நடித்த தேவதாஸ் ஹிந்திப் படம் ரூ.70 கோடிக்கு வியாபாரம் ஆனது. தமிழில்- இருவர், ஜீன்ஸ், கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன் ஆகிய படங்களில் நடித்து இருக்கிறார்.

இவர் கேன்ஸ் திரைப்பட விழாவுக்கு சென்றபோது அங்கு வெளிநாட்டினர் படத்தில் நடிக்குமாறு கேட்டுள்ளனர். ஏற்கனவே பல படங்களுக்கு ஒப்பந்தமாகி இருப்பதால் தற்போது நடிக்க இயலாது என தெரிவித்துள்ள ஐஸ்வர்யாராய், சில படங்களின் கதைகளை வாங்கிப் படித்து வருவதாக கூறியுள்ளார். கதையைத் தேர்வு செய்த பின்னர் அடுத்த ஆண்டு மத்தியில் ஹொலிவுட் படத்தில் நடிப்பேன். இது தொடர்பான அறிவிப்பை விரைவில் வெளியிடுவேன் என்றும் அவர் தெரிவித்ததுள்ளார்.

ஆங்கில படம் பெரிய விஷயமல்ல. எப்படி ஹிந்தி, தமிழ், பெங்காலி படத்தில் நடிக்கிறேனோ, அவ்வாறுதான் ஆங்கிலப் படமும். படத்தின் கதையை தேர்வு செய்வதில் கவனம் செலுத்துகிறேன். அதிக படங்களில் நடிப்பது எனக்கு முக்கியமல்ல எனத் தெரிவித்துள்ளார் ஐஸ்வர்யாராய்.

## அமெரிக்க விண்கலம்





## காற்றினால் தரையிறங்கத் தாமதம்

காலநிலை பாதிப்பால் தரையிறங்க முடியாது திணறிக் கொண்டிருந்த அமெரிக்க விண்கலம் என்டோவர் **(Endeaour)** கடந்த சனியன்று பத்திரமாகத் தரையிறங்கியது. கடும் காற்றினால் தரையிறங்க தாமதித்த இவ்விண்கலம் இறுதியில் புளோரிடாவில் உள்ள கெனடி விண்வெளி மையத்தில் ஏழு விண்வெளி வீரர்களுடன் வந்திறங்கியது. இவ்வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் **(International Space Station)** ஆறு மாதங்களைக் கழித்த பின் தற்போது பூமிதிரும்பியுள்ளனர்.

என்டோவர் கடந்த புதன் கிழமையே தரையிறங்கத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், கடும் காற்றினால் நாசா நிறுவனம் இதன் தரையிறக்கத்தை ஒத்திவைத்தது. "எம்மை பூமியில் இறங்க விடாது தொடர்ந்து தடுத்திருந்தால் நாம் நிலவில் போய் இறங்கி நத்தார் பண்டிகை கொண்டாடியிருப்போம்" என நகைச்சுவையாகக் கூறினார் தரையிறங்கிய விண்வெளி வீரர்களில் ஒருவரான மைக்கல் லோப்பஸ்.

## துணிக்கடையில் திருடிய அமெரிக்க நடிகை



அமெரிக்க பிரபல நடிகை வினோனா ரைடர்(31) புடைவைக் கடையொன்றிலிருந்து துணிவகைகளைத் திருடிய குற்றத்திற்காக நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டுள்ளார். சிறைத் தண்டனையிலிருந்து தப்பிய போதும அவருக்கு 480 மணி நேர கட்டாய சமூகசேவை 2,700 டொலர் தண்டம், கடையில் சேதம் விளைவித்த நஷ்ஈடாக 6,000 டொலர் என்ற தீர்ப்பைக் கடந்த வெள்ளியன்று பெர்வளிஹில்ஸ் நீதிமன்றம் வெளியிட்டது.

இவர் கைது செய்யப்பட்டபோது இவர் வசம் பல மருத்துவப் பொருட்கள் இருந்தமையால் இவரை மருத்துவ மற்றும் மனநல பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.

கடந்த மாதம் ஹொலிவூட்டில் உள்ள ஒரு சுப்பர் மார்க்கட்டில் துணிமணிகள் விற்கும் பகுதியில், இந்தப் பிரபல நடிகை 5,000 டொலர் பெறுமதியான துணிவகைகளைத் திருடியபோது, அங்கு பொருத்தப்பட்ட வீடியோ கமராக்கள் மூலம் இவர் காவலர்களிடம் கையும் களவுமாகச் சிக்கினார்.

இதுபற்றிய முதற் செய்தியொன்று நமது ஈழநாட்டில் முன்னர் வெளிவந்ததும் உங்களுக்கு நினைவிருக்கலாம்.




# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம் 10**

**1914** ஏப்ரல் மாதம் சார்லியின் முதல் இரு ரீல் படம் 'மேபெல் அட் த வீல்' தயாரானது. பெப்ரவரி மாதத்திலிருந்து பத்துப் படங்களில் நடித்ததோடு பல விஷயங்களைக் கற்றுக் கொண்டார். ஆனால் சந்தோஷப்பட முடியவில்லை. திரைப் படங்களில் என்ன சாதிக்க முடியும் என்று சார்லிக்கு இப்போது தெரிந்திருந்தாலும் அவருடைய கருத்துகள் எல்லாமே நிராகரிக்கப்பட்டன. தான் நினைப்பது சரியென்றால் சார்லி தைரியமாக எவரிடத்திலும் தம் கருத்துக்களைக் கூறுவார். மேக் சென்னட்டிடம் தங்களை மரியாதையுடன் நடத்த, சம்மதிக்க வைத்தார்.



சென்னெட் முக்கியமானவர். அவர் சார்லியை நீக்கி விடும் முடிவுக்கே வந்துவிட்டார். ஆனால் மக்கள் சார்லியை விரும்பினர். விநியோகஸ்தர்கள் மென்மேலும் சார்லியின் நிறையப் படங்களைக் கேட்டார்கள்.

சென்னெட் வேறு வழியில்லாமல் சார்லியின் கோரிக்கைகளுக்கு ஒப்புக் கொண்டார். அதிலிருந்து கீஸ்டோன் ஸ்டுடியோவை விட்டு வெளியேறும் வரை, தான் நடித்த எல்லாப் படங்களையும்- ஒரு படம் தவிர- சார்லியே இயக்கவும் செய்தார்.

மிகவும் குறுகிய காலத்தில் தான் நினைத்ததை செய்து முடித்தார் சார்லி. அசையும் படங்களில் அவர் ஒரு முக்கிய புள்ளி. ஆனால் அதற்கான விலையையும் கொடுக்க வேண்டியிருந்தது.

கீஸ்டோனுக்கு வந்த புதிதில், வேலை முடிந்தவுடன் மற்றவர்களுடன் மது அருந்தினார். அல்லது குத்துச் சண்டைப் போட்டிகளைக் காணச்சென்றார். ஆனால் வேலைப்பளு அதிகமாக அவருடைய பொதுவாழ்க்கை மங்கிப் போனது. கர்னோவிடம் இருந்தது போன்றே ஆயிற்று. மற்ற எல்லாவற்றையும் விட சார்லிக்கு வேலை தான் முக்கியம். அவர் அடிக்கடி தனிமையை உணர்ந்தார்.

செனெட்டுடனான சார்லியின் ஒப்பந்தம் விரைவில் முடிவடையவிருந்தது. புகழேணியில் தன்னுடைய திடீர் எழுச்சியைக் கண்டு பெருமைப்பட்டும், ஆச்சரியப்பட்டும் சிட்னிக்கு ஒரு கடிதம் எழுதினார்.

"என்னுடைய முழு நேரமும் திரைப்படத்தில்தான் கழிகின்றது. நான் எழுதி, இயக்கி, நடிக்கவும் செய்கிறேன். சொன்னால் நம்பு. இவை நேரத்தையெல்லாம் விழுங்கிவிடும். சிட், நான் வெற்றி பெற்றுவிட்டேன். எல்லா அரங்கங்களும் என் பெயரை பெரிய எழுத்துக்களில் போடுகின்றன. இந்த நாட்டில் நான் பொக்ஸ் ஒவ்வீஸ் பிரபலம். உலகின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆண்களும், பெண்களும் வாரம் ஐம்பது கடிதங்கள் எழுதுவதாக எல்லா அரங்க நிர்வாகிகளும் என்னிடம் தெரிவிக்கின்றனர். இந்தக் குறுகிய காலத்தில் இத்தனை பெயர் கிடைத்திருப்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது. அடுத்த வருடம் நிறையப் பணம் சம்பாதிப்பேன் என்று நம்புகிறேன்."

படிப்பறிவில்லாதது, சார்லியை பின்தங்க வைக்கவில்லை. அவர் திறமையான வியாபாரி. தான் முன்னேற வேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தார். "திரு.சென்னெட் அருமையான மனிதர். நாங்களிருவரும் நண்பர்கள். ஆனால் நட்பு வேறு. வியாபாரம் வேறு." இது துணிவான முடிவு.

ஆனால் அதை எடுக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. சில ஏமாற்றங்களுக்கும், எதிர்பார்ப்புகளுக்கும் பிறகு, இறுதியில் சிகாகோவிலிருக்கும் எஸ்ஸனே படத் தயாரிப்புக் கம்பெனியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். திரைப்படத்துறையில் தன்னுடைய பயிற்சிக்கால அனுபவங்களைப் பின்னணியில் சாதகமாகக் கொண்டு 1914ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சார்லி சிகாகோவிற்கு பயணமானார்.

சிகாகோவில் குளிர் நிலவியது. எஸ்ஸனேயின் தயாரிப்பு முறைகளைக் கண்டதும் சார்லிக்கு அதை விட குளிர் எடுக்கத் துவங்கியது.

கீஸ்டோன் சில சமயங்களில் தொல்லைகள் தந்தாலும் அது உயிரோட்டத்துடன் புதுமையாகவும் இருந்தது. எஸ்ஸனே மோசமான முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அங்கே விரயமும், சிக்கனமும் ஒரே சமயத்தில் நடந்து கொண்டிருந்தன.

ஆனால், அங்கே சில அருமையான நகைச்சுவை நடிகர்கள் இருந்தார்கள். ஒரு மோசமான பேரத்தில் கிடைத்த நன்மையாக சார்லி இதைக் கருதினார்.

சக ஊழியர்களுக்கு சார்லி ஒரு புரியாத புதிர். ஏற்கனவே ஒரு பெரிய நட்சத்திரமாக இருந்தாலும், குறைவான உடமைகளுடன் எளிமையாகவே காணப்பட்டார். வழக்கம்போல் வேலைதான் அவருக்கு வாழ்க்கை. அவர் அதை கவர்ச்சியானதாகவோ, கிளர்ச்சியூட்டுவதாகவோ கருதவில்லை. முடிந்தவரை நிறைவாக செய்ய வேண்டியதாகவே நினைத்தார்.

எஸ்ஸனே ஸ்ரூடியோ பதினான்கு படங்களை உருவாக்க சார்லியுடன் பேரம் பேசிக் கொண்டது. 'ஹிஸ் நியூ ஜொப்' இரண்டே வாரங்களில் உருவாக்கப்பட்டது. இந்தப் படம் திரையிடப்படுவதற்கு முன்னரே, வியாபாரத்தில் அதுவரை தயாரிக்கப்பட்ட எஸ்ஸனேயின் எந்தப் படத்தையும் விட அதிகப் பணம் ஈட்டித்தந்தது.

ஆனால், சார்லியால் சிகாகோவின் குளிரைத் தாங்க முடியவில்லை. அதனால் சிறிதாக அதிக வசதிகள் இல்லாத, ஆனால் கதகதப்பான கலிபோர்னியா ஸ்ரூடியோ ஒன்றுக்கு மாறிக் கொண்டார்.

பல இடையூறுகளுக்கிடையிலும் சார்லி சில நல்ல படங்களை உருவாக்கினார். நகைச்சுவை ரசனை மாறுதலுக்குட்பட்டது. இன்றைய பார்வையாளர்களுக்கு திரும்பத் திரும்பக் கூறுவதாகவும் அருவருப்பானதாகவும் தோன்றக் கூடியவைகளைக் கண்டு 1915 வருட பார்வையாளர்கள் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தனர். ஆனால் சார்லியின் நுட்பமான மௌனமொழி நடிப்பும், மின்னல் சிரிப்பும், நேரக் கணக்கோடு செய்த நகைச்சுவையும் அன்று கமரா அதைப் படம் எடுத்தபோது இருந்தது போலவே இன்றைக்கும் பசுமையாக இருக்கின்றது.

(அடுத்த அரங்கில் தொடரும்)

## கண்பார்வையை ஏற்படுத்தும் இலத்திரனியல் சாதனம்



இலத்திரனியல் கண்ணை விஞ்ஞானிகள் உருவாக்கி வருகின்றனர். இது பலரின் கண்பார்வையை மீளக் கொண்டுவரப் போகின்றது. விழித்திரையைச் சுற்றியுள்ள கலங்களை நுண் இலத்திரனியல் கருவியால் தூண்டி அதன் மூலம் மூளையில் உள்ள பார்வைப்புலன் கலங்களை தூண்டலாம் என நம்பப்படுகின்றது. விலங்குகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் வெற்றியை தந்துள்ளன. மனிதனில் இக்கருவியை இன்னும் மூன்றாண்டுகளில் பொருத்த முடியும் என்கின்றனர் இந்த ஆய்வாளர்கள்.

செயற்கையான விழித்திரையாக இந்த இலத்திரனியல் கருவி சத்திரசிகிச்சை மூலம் கண்ணுக்குள் பொருத்தப்படும். இக்கருவி சுற்றியுள்ள பாதிக்கப்படாத விழித்திரைக்கலங்களை தூண்டும். இதன் மூலம் பார்வை திரும்பும்.

4 மில்லிமீற்றர் நீளமான இக்கருவியுடன் **PDMS (Polydimethyl siloxane)** எனும் சிலிக்கன் பொருத்தப்பட்டிருக்கும். விழித்திரையைச் சேதமாக்காது, அதன் அமைப்பிற்கு ஏற்ப, நெகிழக்கூடியவாறு இது இருக்கும்.

# இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
# 2002 ஆம் ஆண்டு செயற்திட்ட முன்னேற்ற அறிக்கை

### புனரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட ஆலயங்களின் பெயர்கள்

1 கொற்றாவத்தை செட்டித்துறை சித்திவிநாயகர் ஆலயம், கரணவாய் வடக்கு, கரவெட்டி
2. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், பெருங்குளம், வேலணை.
3. ராகுஸ் எஸ்டேட் கோவில், களுத்துறை.
4. பல்லேகொட எஸ்டேட் கோவில், களுத்துறை.
5. கொலேடன் எஸ்டேட் கோவில், களுத்துறை.
6. டெல்பிறின் எஸ்டேட் கோவில், களுத்துறை.
7. உயிக் வெலின் எஸ்டேட் கோவில், களுத்துறை.
8. மிருசுவற்ற எஸ்டேட் கோவில், களுத்துறை.
9. நியூசற்றேல் எஸ்டேட் கோவில், களுத்துறை.
10. லேன் பெற்றேற்றியார் எஸ்டேட் கோவில், களுத்துறை.
11. அம்பதென்ன எஸ்டேட் கோவில், களுத்துறை.
12. எல்துவ எஸ்டேட் கோவில், களுத்துறை.
13. யட்டுதெல்ல எஸ்டேட் கோவில், களுத்துறை.
14. றஜகல்ல எஸ்டேட் கோவில், களுத்துறை.
15. வெற்றிகல எஸ்டேட் கோவில், களுத்துறை.
16. செல்றிட எஸ்டேட் கோவில், களுத்துறை.
17. மிரிஸ்தன எஸ்டேட் கோவில், களுத்துறை.
18. கனகாமபிகா சமேத கனகலிங்கேஸ்வரர் ஆலயம் தெக்கணபபாய், வட்டுக்கோட்டை.
19. சிவன் கோவில், காரைநகர்.
20. யாழ்.சத்திரத்து ஞானவைரவர் தேவஸ்தானம்
21. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், திருநெல்வேலி.
22. மூத்த விநாயகர் தேவஸ்தானம், நல்லூர்
23. வம்மியடி பிள்ளையார் ஆலயம், ஆலையடி வேம்பு, அம்பாறை.
24. வண்ணை கோட்டையம்பதி அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், யாழ்ப்பாணம்.
25. யாழ்.நாயன்மார்க்கட்டு அரசடிப் பிள்ளையார் ஆலயம்,
26. உரும்பிராய் பர்வத பத்தினி அம்மன் கோயில்.
27. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், கந்தர்மடம்.
28. உரும்பிராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோயில்.
29. அருள்மிகு செல்வநாகபூசனி அம்பாள் திருக்கோயில் கந்தர்மடம்.
30. ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
31. பானன்குளம் நாச்சியம்மன் ஆலயம், நல்லூர்.
32. மிருசுவில் துர்க்காபுரம் ஸ்ரீ ஞானதுர்க்கா அம்மன் ஆலயம்.
33. சித்தி விநாயகர் தேவஸ்தானம், தச்சடம்பன் மாங்குளம்.
34. சின்னவளவு ஞானவைரவர் கோயில், அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.
35. கலிகை கந்தசாமி கோயில், துன்னாலை தெற்கு, கரவெட்டி
36. சாமனந்தறை ஆலடிப்பிள்ளையார் கோயில், அல்வாய்.
37. வதிரி பூவக்கரை பிள்ளையார் ஆலயம், அல்வாய்.
38. வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம், பன்னாலை, தெல்லிப்பழை.
39. இரண்டாங்காளி முருகன் கோயில், நயினாதீவு
40. ஸ்ரீசொர்ண சித்திவிநாயகர் தேவஸ்தானம், கொக்குவில்
41. படையட்டான் தோட்டம் கந்தசாமி கோயில், சாவகச்சேரி
42. கபதீஸ்வரம் சிவன் கோயில், ஊர்காவற்துறை
43. சட்டியப்பனை அம்மன் கோயில், வட்டுக்கோட்டை
44. கிரம்புவில் கந்தசாமி கோயில், சாவகச்சேரி
45. யாழ்ப்பாணம் திருவெண்ணை நகர் அருள்மிகு செந்தில் கதிர் வேலாயுதசுவாமி திருக்கோயில்.
46. பெரிய தம்பிரான் நீலசோதி கோயில், சாவகச்சேரி
47. சிறுப்பிட்டி சிவகாமி அம்பாள் கோயில், நீர்வேலி
48. பூரண புற்கலை சமேதர அரிகரபுத்தி ஐயனார் ஆலயம், வேலணை.
49. புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், இடைக்காடு.
50. வீரபத்திர விநாயகர் ஆலயம், மாவிலித்துறை, நெடுந்தீவு.
51. அருள்மிகு புறானை ஈஸ்வரர் விநாயகர் ஆலயம், சுழிபுரம்.
52. சித்திவிநாயகர் தேவஸ்தானம், நாவற்குழி
53. இமையாணன் ஸ்ரீ முருகன் ஆலயம், உடுப்பிட்டி
54. செல்வபுரம் வீரபத்திர ஆலயம், கரவெட்டி.
55. சத்தியம்மன் தேவஸ்தானம், பருத்தித்துறை.
56. அருள்மிகு ஞானவைரவர் ஆலயம், சிறுப்பிட்டி.
57. அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், கோப்பாய்.
58. அருள்மிகு தான்தோன்றீஸ்வரர் ஆலயம், அளவெட்டி மேற்கு.
59. நாவலடி பேச்சியம்மன் தேவஸ்தானம், வண்ணார் பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம்
60. ஸ்ரீ வள்ளியம்மை ஆலயம், கைதடி
61. விளாவெளிமருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம், நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
62. தலசிகுளம் கண்ணகியம்பாள், ஆலயம், கொடிகாமம்.
63. முள்ளியான் மண்டலப் பிள்ளையார் கோயில், புலோலி மேற்கு, பருத்தித்துறை
64. ஆலடிப் பிள்ளையார் கோயில், புலோலி மேற்கு, பருத்தித்துறை.
65. அருள்மிகு ஸ்ரீ கதிர்காமசுவரமி ஆலயம், காரைநகர்
66. நவாலி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம், நவாலி தெற்கு, மானிப்பாய்.
67. மீசாலை காட்டுவளவு நெல்லியடி கந்தசாமி கோயில்.
68. மாவடிப்பிள்ளையார் ஆலயம், கரவெட்டி.

### புனரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட இந்து நிறுவனங்கள்

1. வாழ்வகம், மருதனார் மடம், சுன்னாகம்
2. சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம், நீராவியடி, யாழ்ப்பாணம்.
3. இந்து சமய கலாசார அபிவிருத்திச்சபை, நாவற்குழி, கைதடி.
4. தரிசனம், மட்டக்களப்பு
5. சின்மயா மிஷன், கொழும்பு
6. சைவ வித்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி.
7. திக்கரைக் கிராம இந்து அபிவிருத்திச் சங்கம், காரைநகர். (தில்லை மயானக்கட்டடம் அமைப்பதற்கு)
8. திக்கரைக் கிராம இந்து அபிவிருத்திச் சங்கம், காரைநகர் அற நெறிப்பாடசாலையைப் புனரமைப்பதற்கு.

### அன்னதானம் வழங்குவதற்காக நிதியுதவி வழங்கப்பட்ட ஆலயங்கள்

1. தும்பளை இலட்சுமணன் தோட்டப்பிள்ளையார் ஆலயம், பருத்தித்துறை.
2. ஸ்ரீ சித்திர வேலாயுதசுவாமி ஆலயம், சித்தாண்டி, மட்டக்களப்பு.
3. ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் முத்துமாரியம்மன் ஆலயம், மட்டக்களப்பு.
4. நெலுவினி ஸ்ரீ சித்திவிநாயகர் அன்னதானசபை, நெடுந்தீவு.

### ஆலயங்கள்/இந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட வாகனங்களின் விபரம்

*எல்:வ் வான் -*

1. சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டமனாறு

*முச்சக்கரவண்டி -*

1. சாரதா சேவா ஆச்சிரமம், பருத்தித்துறை
2. ஸ்ரீ காயத்ரி காமகோடிபீடம், மீசாலை
3. ஆலய சேவா சங்கம், தோப்புக்காடு, காரைநகர்
4. அகில இலங்கை திருமுறைமன்றம், நல்லூர், யாழ்ப்பாணம்.
5. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
6. யா/மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் .
7. யா/வேம்படி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் .
8. யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம் .
9. புளியங்கூடல் இந்து முத்து விநாயகர் ஆலயம்.
10. ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம் சிறுப்பிட்டி, நீர்வேலி.
11. செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம் யாழ்ப்பாணம்.
12. அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர்கள் சபை யாழ்ப்பாணம் .
13. ஸ்ரீ நாகபூசனி அம்மன் கோவில், நயினாதீவு.
14. மங்கயற்கரசியார் மகளிர் இல்லம், மட்டக்களப்பு.
15. விழிப்புலனற்றோர் இல்லம் (தரிசனம்) மட்டக்களப்பு.
16. யோகசுவாமி சைவ மகளிர் இல்லம், சித்தாண்டி, மட்டக்களப்பு.
17. அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில், வவுனியா.
18. மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
19. கிராம இந் து அபிவிருத்திச்சங்கம், வாதரவத்தை.
20. கொற்றாவத்தை செட்டித்துறை சித்திவிநாயகர் ஆலயம் கரவெட்டி.
21. தும்பளை இலட்சுமணன் தோட்டப்பிள்ளையார் ஆலயம் பருத்தித்துறை.
22. வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயம், காரைநகர்.
23. வாழ்வகம், விழிப்புல வலுவிழந்தோர் இல்லம், மருதனார்மடம், சுன்னாகம்.
24. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம் துன்னாலை, கரவெட்டி
25. சர்வதேச இந்து மதகுருமார் ஒன்றியம், நீராவியடி யாழ்ப்பாணம்.
26. யாழ்.பரியோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்.
27. ஸ்ரீ வடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம், தாவடி.
28. ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், சுதுமலை.
29. ஸ்ரீ வீரபத்திரசுவாமி ஆலயம், நயினாதீவு.
30. மகா ஸ்ரீ வித்தியா சர்வதேச இந்துமதபீடம், கொழும்பு.
31. மீனாட்சி அம்மன்கோவில், நீர்வேலி.
32. பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், நெடுந்தீவு.
33. கிருஸ்ணன் கோயில், பொன்னாலை.
34. சிவதொண்டன் நிலையம், யாழ்ப்பாணம்.
35. வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம், ஏழாலை.
36. வடக்கம்பரை அம்மன் கோயில், யாழ்ப்பாணம்.
37. நெல்லியடி முருகன்கோயில், பருத்தித்துறை.
38. கலிகை முருகன் கோயில், துன்னாலை தெற்கு, கரவெட்டி.
39. வைரவர் கோயில், ஏழாலை.
40. ஸ்ரீநாகேஸ்வரம் கோயில், அளவெட்டி.
41. ஸ்ரீ துர்க்கா தேவி அம்பாள் ஆலயம், தெல்லிப்பழை.
42. தில்லையம்பல அம்மன் கோயில், கோண்டாவில்.
43. நாவலர் மணிமண்டபம், யாழ்ப்பாணம்
44. உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவகம், யாழ்ப்பாணம்.
45. இந்து சமய கலாச்சார அபிவிருத்திச்சபை, நாவற்குழி, கைதடி.
46. போச்சுட்டி முருகமூர்த்தி கோயில், காரைநகர்.
47. சென்பற்றிக்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்.
48. சிவானந்த தபோவனம், திருகோணமலை.
49. கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்.
50. பெரிய தம்பிரான் ஆலயம், பருத்தித்துறை.

❖ 50 முச்சக்கர வண்டிகளுக்குமான காப்புறுதிச்செலவு பெயர் பொறித்தற் செலவு முச்சக்கர வண்டியைக் கொண்டு வருவதற்கான எரிபொருள் செலவு, சாரதி கூலி, மற்றும் இதர செலவுகள் -1,38,275/-

❖ ஆலயங்களுக்கும் இந்து நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட வாகனங்களின் பதிவுகள் யாவும் எமது அமைச்சின் பெயரிலேயே உள்ளன.

### பொழிப்பு

| விபரம் | |
|---|---|
| 1. ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 4 775 000.00 |
| 2. இந்து ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 2 175 000.00 |
| 3. ஆலயங்களில் அன்னதானம் வழங்குவதற்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 350 000.00 |
| 4. இந்து ஆலயங்களுக்கும்/இந்துநிறுவனங்களுக்குமாக வழங்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி | 10 687 275.00 |
| மொத்தம் | 17 987 275.00 |

### இந்து கலை கலாசார மேம்பாடு

1. எழுத்தாளர்களிடமிருந்து 77 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. (இலக்கிய நூற் பிரதிகள் 2821, சமய நூற்பிரதிகள் 514)
2. கலாபூசண விருது வழங்கல்
   2001 - 27 கலைஞர்கள்
   2002 - 21 கலைஞர்கள்
3. நாட்டுப்புறக்கலைக் கூத்துக்களான வள்ளி திருமணம், சத்தியவான் சாவித்திரி என்பனவற்றை ஒலிப்பதிவு செய்து ஆவணப்படுத்தியமை.
4. இலங்கைக் கலைஞர்கள் பங்குபற்றிய இயலிசை, பாரம்பரிய கலையரங்கு நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.

### ஆலயங்களுக்கான உபகரணங்கள் வழங்கல்

*1 யாழ்ப்பாண மாவட்டத்தில் மின்சார வசதிகள் இல்லாத பகுதிகளிலுள்ள 15 ஆலயங்களுக்கு சூரிய மின்பிறப்பாக்கிகள் வழங்கியமை.*

1. கலிகை முருகன் ஆலயம், துன்னாலை தெற்கு, கரவெட்டி (7 விளக்குகள்)
2. அளவெட்டி நாகேஸ்வரர் ஆலயம், அளவெட்டி (7 விளக்குகள்)
3. சிறுப்பிட்டி வைரவர் ஆலயம், கோப்பாய். (7 விளக்குகள்)
4. கனகாம்பிகை சமேத கனகலிங்கேஸ்வரர் ஆலயம், வட்டுக்கோட்டை. (7 விளக்குகள்)
5. திக்கரை முருகமூர்த்தி ஆலயம், காரைநகர் (5 விளக்குகள்)
6. புளியங்கூடல் இத்தியடி பிள்ளையார் ஆலயம். ஊர்காவற்துறை (5 விளக்குகள்)
7. நாயன்மார்கட்டு அரசடி விநாயகர் ஆலயம், நல்லூர் (5 விளக்குகள்)
8. கைதடிப் பிள்ளையார் ஆலயம், கைதடி (5 விளக்குகள்)
9. தும்பளை இலட்சுமணன் தோட்டப் பிள்ளையார் ஆலயம் (5 விளக்குகள்)
10. முத்துமாரியம்மன் ஆலயம், வேலணை. (5 விளக்குகள்)
11. ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம், நயினாதீவு. ( 5 விளக்குகள்)

12. மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் (5 விளக்குகள்)
13. பெரியதம்பிரான் ஆலயம், பருத்தித்துறை (5 விளக்குகள்)
14. சிவன்கோவில், காரைநகர் (5 விளக்குகள்)
15. ஸ்ரீ போதீஸ்வரர் ஆலயம், கரவெட்டி (5 விளக்குகள்)

*2 நாவலர் மணி மண்டபத்திற்கான ஒருபெருக்கி வழங்கல்.*
*3. களுத்தறை நேபொட முத்துமாரியம்மன் கோவிலுக்கு இசைக்கருவிகள் வழங்கல்.*
*4. இந்தியாவிலிருந்து பித்தளையில் குத்துவிளக்கு, வாசமாலை, நடராஜர், சிவகாமி சுவாமி சிலைகள், பூசைமணிகள் போன்ற ஆலய பூசை உபகரணங்களின் மாதிரிகள் இறக்குமதி செய்யப்பட்டமை*
*5. இந்து (நந்தி) கொடி அச்சிட்டு இலவசமாக ஆலயங்கள், இந்து நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளமை.*
*6. நாயன்மார்களுடைய நால்வர் படம் 2000 பிரதிகள் அச்சிட்டு இலவசமாக ஆலயங்கள், இந்து நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளமை.*

## ஆலயங்களுக்கு நித்தியபூசை வழிபாட்டிற்காக நிதியுதவி வழங்கல்

ஆலயத்தின் பெயர்
1. கோப்பாய் தெற்கு அத்தித்தோட்டம், அருள்மிகு பரமேஸ்வரி அம்பாள் ஆலயம், கோப்பாய்.
2. ஸ்ரீ வெள்ளிமலை விநாயகர் ஆலயம், உத்துச்சேனை, வெலிக்கந்தை.
3. கற்பக விநாயகர் ஆலயம், கொழும்பு இந்துக் கல்லூரி, இரத்மலானை.
4. ஸ்ரீ சுப்பிரமணியம் ஆலயம், வட்டவளை, நுவரேலியா.
5. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், டெல்கத் அரசயாக்கம், கொம்பல் டிவிசன், பதுரலிய.
6. ஸ்ரீ பரமநயினார் ஆலயம், கல்வீட்டுத் திண்ணையடி, ஆரையம்பதி 01, மட்டக்களப்பு.
7. விக்கினேஸ்வரர் பிள்ளையார் ஆலயம், புதுக்குடியிருப்பு 4. ஆரையமபதி.
8. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், எலகல, கம்மடுல.
9. திருநீற்றுக்கேணி சிவசக்தி முருகன் ஆலயம், 4ஆம் குறிச்சி, களுதாவளை, களுவாஞ்சிக்குடி.
10. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், இல 59, எத்தாளைத் தோட்டம், கம்பெல பிரிவு.
11. ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில், நுக்கரசல் தோட்டம், தெரணியகல.
12. அருள்மிகு ஐயனார் கோவில், வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
13. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வெல்லாவெளி.
14. ஸ்ரீ மகாவிசுஷ்ணு ஆலயம், பழுகாமம் 2, பெரிய போரதீவு.
15. மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், உருத்திரபுரம்.
16. சிவன் ஆலயம், சிவகிராமம், கிளிநொச்சி.
17. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், காதுவெல வீதி, நொச்சியாகம.
18. உதிரவேங்கை வைரவர், கரைச்சி, கிளிநொச்சி.
19. வேல்முருகன் ஆலயம், நவவி பாலமோட்டை.
20. ஸ்ரீ கற்பகவிநாயகர், குமுளமுனை, முள்ளியவளை.
21. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பழைய ஊர், செங்கலடி.
22. நடன மும்மாரியம்மன் ஆலயம், இத்தியடி, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
23. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், பாலம்பிட்டி, விடத்தல்தீவு, மன்னார்.
24. ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலயம், மடத்தடி, திருகோணமலை.

## ஆலயங்களுக்கு சிலை கொள்வனவிற்காக நிதியுதவி வழங்கல்

1. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஸ்டப்டன் பிரிவு, இறக்குவாணை.
2. ஸ்ரீ பாலவிநாயகர் ஆலயம், சேதவத்தை வீதி, 27ஆம் தோட்டம், பெலவத்தை.
3. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வட்டுப்பித்தான்மடு, உயிலங்குளம்.
4. ஸ்ரீ கதிரேசர் பிள்ளையார் ஆலயம், பெரியவெளி, மல்லிகைத்தீவு.
5. ஸ்ரீ விநாயகர் ஆலயம், இதொலஸ்வல பாரதி தமிழ் வித்தியாலயம், நித்திக்கலை.
6. ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம், ஸ்ரீ சுமணகம வெரலவ, இரத்தினபுரி.
7. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், உருசல், பெதமானுவர, கண்டி.
8. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், கறுக்காமுனை, நச்சிவம்பற்றை, வெருகல்.
9. ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், 37/1, பொம்பகல, திசேவயர் வீதி, இரத்தினபுரி.
10. கறப்பனை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கறப்பனை, செவனம்பிட்டி, பொலநறுவை.
11. ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயம், புன்னச்சோலை, மட்டக்களப்பு.
12. ஸ்ரீ குமாரத்தன முருகன் ஆலயம், ஜெயந்திபுரம், மட்டக்களப்பு.
13. ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், டிப்போவீதி, கிளிநொச்சி.
14. ஆத்தியடி பிள்ளையார் ஆலயம், அட்டன் இல:10, பனிய டிவிசன், சாமிமலை.
15. அருள்மிகு ஸ்ரீ காளியம்மன் கோவில், இல 412, போகமடித்த ஹலிஎல.

## ஆலயங்களில் அன்னதானம் வழங்குவதற்காக நிதியுதவி வழங்கல்

1. ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம், நயினாதீவு.
2. ஸ்ரீ கந்தசாமி ஆலயம், மாவை ஆதீனம், மாவிட்டபுரம்.
3. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், காகிதாலை, வாழைச்சேனை.

## இந்து சமய நடவடிக்கைகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட இந்து சமய நிறுவனங்கள்

1. பாரதி நற்பணி மன்றம், டேவின் ஏ பிரிவு, டெல்வின், இறக்குவானை.
2. அன்னமலை இந்துக்கலை மன்றம், அன்னமலை, கல்முனை.
3. கச்சியப்பர் கழகம், 223, தேக்கவத்தை, கண்டி வீதி, வவுனியா.
4. சிவநெறிக்கழகம், மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை
5. இந்து கதிர்காம பாதயாத்திரிகர் சபை 38/8, சென் அன்ரனி மாவத்தை, கொழும்பு 13.
6. யாழ். மாநகரசபை இந்து சமய விவகாரக் குழு, மாநகரசபை, யாழ்ப்பாணம்.
7. இந்து மாமன்றம், வெலிஓயா, மேற்பிரிவு, ஹற்றன்.
8. ஸ்ரீ ரமண மகரிஷி அறப்பணி நிலையம், 14/4, 2 ஆம் குறுக்கு, பார்லி வீதி, மட்டக்களப்பு.
9. உலக ஆன்மீக எழுச்சிப்பேரணி, 31/21, டோசன் றோட், கொழும்பு 02.
10. இந்துப் பேரவை, 375, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
11. இந்து இளைஞர் மன்றம், முனைக்காடு, கொக்கட்டிச்சோலை.
12. அகில இலங்கைத் திருமுறை மன்றம், 376, கச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம்.
13. இந்து அபிவிருத்திச்சங்கம், 63, நல்லையா வீதி, மட்டக்களப்பு.
14. ஸ்ரீ இராமகிருஸ்ண சாரதா சேவா ஆச்சிரமம், பருத்தித்துறை.
15. விவேகானந்த சபை, 34, விவேகானந்தாமேடு, கொழும்பு 13.
16. திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை, 294/1, உட்துறைமுகவீதி, திருகோணமலை.
17. சைவ மகாசபை, களுவாஞ்சிக்குடி.

## தமிழ் இந்து கலாசார மன்றங்களின் மேம்பாட்டுக்காக வழங்கப்பட்ட நிதியுதவி

1. கிளிநொச்சி தமிழ் மன்றம்.
2. கொழும்பு தமிழ்ச்சங்கம்.
3. ஸ்ரீஸ்கந்தராஜா இசைக்குழு, வவுனியா.
4. திருவள்ளுவர் அபிவிருத்தி மன்றம், கட்டபுலா.
5. கம்பன் கழகம், யாழ்ப்பாணம்.
6. தமிழ் கலை, கலாச்சார மேம்பாட்டு அமைப்பு.
7. கதிர்ப்புக் கலை இலக்கியவட்டம், கல்முனை.
8. கொழும்பு தமிழ்ச் சங்கம்.
9. சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ்ப்பாணம்.

## இந்து அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்காக நிதியுதவி வழங்கல்

1. ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி அறநெறிப் பாடசாலை, திருக்கோவில்.
2. விவேகாந்தர் அறநெறிப் பாடசாலை, றொக்கத்தன வடக்கு, ஹாலிஎல.
3. சேக்கிழார் அறநெறிப் பாடசாலை, புதுக்குடியிருப்பு, வாழைச்சேனை.
4. பாரதி அறநெறிப் பாடசாலை, கொல்பொட மத்தியபிரிவு, கட்டுகிந்துல.
5. அகத்திக்குழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, சாவற்காடு.
6. பாரதி அறநெறிப் பாடசாலை, பெரியவெளி, மல்லிகைத்தீவு.
7. கலைமகள் அறநெறிப்பாடசாலை, கேகாலைப்பிரிவு, கத்திரிகாமம் தோட்டம், துயகம.
8. ஸ்ரீ ஐயனார் கோயில் அறநெறிப்பாடசாலை, வலகப்பிட்டிய வீதி, நாத்தாண்டியா
9. ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, கட்டாஸ்பத்திரி, பேசாலை.
10. கதிரேசன் இந்து அறநெறிப்பாடசாலை, பருத்தியடைப்பு
11. சிவகாமி அம்பிகா சமேதர் சிதம்பரஈஸ்வரர் அறநெறிப்பாடசாலை, காரைநகர்
12. சிவசக்தி மன்ற அறநெறிப்பாடசாலை, 76, தறவனை வீதி, டிக்கோயா.
13. காரைதீவு இந்துகலாசார ஒன்றிய அறநெறிப்பாடாசாலை
14. ஆறுமுகநாவலர் அறநெறிப்பாடசாலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம், நவககம்புர 2.
15. ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, எருக்கலம்பிட்டி, மன்னார்.
16. சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப்பாடசாலை, ஊரெழு, சுன்னாகம்.
17. கெல்பன் ஸ்ரீ முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை, அப்புத்தளை.
18. ஸ்ரீ பாலவிக்கினேஸ்வர ஆலய அறநெறிப்பாடசாலை, பாலையடி; காரைதீவு .
19. திருநெறிக்கழக அறநெறிப்பாடசாலை, கரடிப்போக்கு உபதபால் நிலையம், கிளிநொச்சி .
20. ஸ்ரீ ரங்கநாதப் பெருமாள் அறநெறிப்பாடசாலை, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
21. சைவ இளைஞர் மன்ற அறநெறிப்பாடசாலை.
22. ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை, வட்டவாள், உடப்பு.
23. ஸ்ரீ நாககாளியம்பாள் அறநெறிப்பாடசாலை, வரக்கள்ளி, நுரைச்சோலை.
24. நாவலர் அறநெறிப்பாடசாலை, பாண்டிருப்பு, கல்முனை.
25. கோமாரி ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலை .
26. தாண்டியடி அறநெறிப்பாடசாலை, திருக்கோவில்.
27. இந்து நற்பணி மன்ற அறநெறிப்பாடசாலை, டெல்வின் பி பிரிவு, இறக்குவானை.
28. ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி அறநெறிப்பாடசாலை.

(சி-293)

## இந்து அநாதைச் சிறுவர்கள் இல்லங்களின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட நிதியுதவி

1. சுவாமி நடராஜானநந்தாஜீ சிறுவர் புனர்வாழ்வு மன்றக்கல்லூரி, பிரதான வீதி, சித்தாண்டி
2. கதிரொளி சிறுவர் இல்லம், கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.
3. துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.
4. விபுலானந்தர் மாணவர் இல்லம், குருகுலவீதி, ஆலையடி வேம்பு, அக்கரைப்பற்று 7.
5. திருஞானசம்பந்தர் குருகுலம், பிரதான வீதி, களுதாவளை.
6. திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம், தம்பிலுவில் 2.
7. ஸ்ரீ சண்முக பெண்பிள்ளைகள் இல்லம், 54, வித்தியாலய வீதி, திருகோணமலை.
8. ஜீவஜோதி இல்லம், 52/1 ஆஸ்பத்திரி வீதி, மட்டக்களப்பு
9. விபுலானந்த சிறுவர் இல்லம், திருப்பழுகாமம், மட்டக்களப்பு
10. யோகசுவாமி சைவமகளிர் இல்லம், பிரதான வீதி, சித்தாண்டி, மட்டக்களப்பு
11. அன்பு இல்லம், மத்திய வீதி, திருகோணமலை
12. சிவானந்த தபோவனம், உப்புவெளி, திருகோணமலை
13. சைவவிருத்தியா விருத்திச் சங்கம், திருநெல்வேலி
14. செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவனம், யாழ்ப்பாணம்..

## புனரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட ஆலயங்கள்

1. அருள்மிகு கந்தசுவாமி கோவில், கிளிநொச்சி.
2. தொண்டமானாறு செல்வச்சந்நிதி, யாழ்ப்பாணம்.
3. திருக்கேதீஸ்வரம், மன்னார்.
4. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், நவகம்புர, கிராண்பாஸ்.
5. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஆவரம்பிட்டி, அராலி.
6. சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், சித்தாண்டி.
7. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கறுவாக்கேணி.
8. ஸ்ரீ சித்திரவேலாயுத அம்மன் ஆலயமும், கண்ணகி அம்மன் ஆலயமும், முனைக்காடு.
9. தான்தோன்றீஸ்வரர் ஆலயம், கொக்கட்டிச்சோலை.
10. ஆலகண்டிப் பிள்ளையாரும், சிவாலயமும், கறுவாக்கேணி வடக்கு, வாழைச்சேனை.
11. பிள்ளையார் ஆலயம், களுதாவளை.
12. வீரபத்திரர் ஆலயம், முனைக்காடு.
13. ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், கோட்டைமுனை.
14. ஸ்ரீமுருகன் ஆலயம், ஆலங்குளம்.
15. ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அமிர்தகழி, புனைச்சோலை.
16. வேம்படி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பாலமீன்மடு.
17. ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், கிராண்குளம்.
18. ஸ்ரீசிவசுப்பிரமணிய ஆலயம், பெரியகல்லாறு.
19. ஸ்ரீகிருஷ்ணன் கோவில், குருக்கள் மடம்.
20. ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், கல்லடி.
21. ஸ்ரீசித்திர வேலாயுதசுவாமி ஆலயம், புளியந்தீவு.
22. ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் ஆலயம், மட்டக்களப்பு.
23. உகந்தை முருகன் ஆலயம், அம்பாறை.
24. ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், அன்னமலை.
25. சித்திரவேலாயுத சுவாமி கோவில், திருக்கோவில்.
26. திருமுருகண்டிப் பிள்ளையார் ஆலயம், கிளிநொச்சி.


## புனரமைப்புப் பணிகளுக்காக நிதியுதவி வழங்கப்பட்ட இந்து நிறுவனங்கள் (மடமும் ஆச்சிரமும்)

1 மகாதேவ ஆச்சிரமம், ஜெயந்திநகர், கிளிநொச்சி
2. சர்வதேச இந்துக்குருமார் ஒன்றியம், நீராவியடி, யாழ்ப்பாணம்.
3. கன்னியா வெந்நீர் ஊற்றுக் கிணறுகளும் அதன் சுற்றாடலைப் பராமரித்தலும்.
4. ஸ்ரீகாயத்ரி காமகோடி பீடம்.
5. கீரிமலைக் கேணியும் அதன் சுற்றாடலும்.
6. நாவலர் மணிமண்டபம், நல்லூர்.
7. கதிர்காமம் இந்து யாத்திரிகள் விடுதி திருத்தம்.

## பொழிப்பு

| | |
|---|---|
| 1. இந்து சமய மேம்பாட்டிற்காக மேற்கொள்ளப்பட்ட நிதியுதவி | 550,129.75 |
| 2. பிற இந்து கலாசார நடவடிக்கைகளுக்கான நிதியுதவி | 132,137.00 |
| 3. குருகுலக் கல்வி அபிவிருத்தி | 126,645.00 |
| 4. இந்து சமய கலாசார ஆராய்ச்சி | 661,137.00 |
| 5. இந்து கலை, கலாசார மேம்பாடு | 972,032.00 |
| 6. இந்து அறநெறிப் பாடசாலை அபிவிருத்தி | 2336,913.00 |
| 7. பிற அரச நிறுவனங்களுடனான செயற்பாடு | 23,900.00 |
| 8. நிதியுதவிகள் வழங்கல் | 310,500.00 |
| 9. ஆலயங்களுக்கான உபகரணங்கள் வழங்கல் | 1,532,025.00 |
| 10. ஆலயங்களின் நித்திய பூசை வழிபாட்டுக்கான நிதியுதவி | 220,000.00 |
| 11. ஆலயங்களின் சிலை கொள்வனவிற்கான நிதியுதவி | 140,000.00 |
| 12. ஆலயங்களின் அன்னதானம் வழங்குவதற்கான நிதியுதவி | 30,000.00 |
| 13. இந்து சமய நடவடிக்கைகளுக்காக இந்து சமய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 150,000.00 |
| 14. தமிழ் இந்து கலாசார மேம்பாட்டிற்காக வழங்கப்பட்ட நிதிகள் | 123,349.00 |
| 15. இந்து அறநெறிப்பாடசாலையின் புனரமைப்புக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 248,125.00 |
| 16. இந்து அநாதை சிறுவர் இல்லங்களின் வளர்ச்சிக்காக வழங்கப்பட்ட நிதியுதவி | 291,965.00 |
| 17. புனரமைப்புப் பணிக்காக ஆலயங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 2,717,000.00 |
| 18. ஆலயங்களின் புனரமைப்புப் பணிகளுக்காக 2001ஆம் ஆண்டின் தொடர்ச்சியான 2ஆம் கட்டக் கொடுப்பனவு | 385,000.00 |
| 19. புனரமைப்புப் பணிகளுக்காக இந்து நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | 1,977,057.00 |
| *மொத்தம்* | *12,927,914.75* |

# திரை விமர்சனம்
## சொல்லமறந்த கதை



விமர்சிப்பது சுலபமானது. ஆனால், விமர்சனங்களின் மத்தியிலும் தரமான படைப்புகளைத் தருபவர் ஒருவர்தான் தங்கர்பச்சான். அவரது 'அழகி' திரைப்படம் பல விமர்சனங்களுக்கு உட்பட்டாலும், தரமான படைப்பாக உணரப்பட்டது. இதேவகையில், அவரது மற்றுமோர் படைப்பாக வந்திருப்பதுதான் "சொல்லமறந்த கதை" திரைப்படம்.

நாஞ்சில் நாதனுடைய "தலைகீழ் விகிதங்கள்" என்ற நாவலை ஆதாரமாகக் கொண்டது இத்திரைப்படம். உணர்ச்சி மிக்க, கல்வியறிவுடைய, கோபக்காரனான ஒரு இளைஞனின் தன்மதிப்புக்கு சவால் எழும்போது, அவனின் பிரதிபலிப்பே கருவாக இப்படத்தில் உள்ளது. பிரபல இயக்குநர் சேரன் இப்படத்தின் கதாநாயகன். இத்தெரிவு மிகப் பொருத்தமானது. ஏனெனில் சேரனின் முக அமைப்பும் உடலமைப்பும் கிராமிய அப்பாவி உணர்வுபூர்வ இளைஞனுக்கு பொருந்தக் கூடிய வகையில் அமைந்துள்ளது. பிரமிட் நடராஜன் சேரனின் மாமனாராக, கல்வியறிவு குறைந்த ஆனால், பெரும் பணம் படைத்தவராக பாத்திரமேற்றுள்ளார்.


கதாநாயகி ரதி பாரதிராஜா, தன் முதல் படத்திலேயே அழுத்தமான முத்திரை பதித்துள்ளார். பணக்காரப் பெண்-குடும்பத்தினரின் நடவடிக்கைகள், பெரிய பிரச்சினைகளை சேரன் - ரதி தம்பதிகள் வாழ்வில் ஏற்படுத்தி குடும்பப் பிரிவுக்கு வழிசெய்து - இறுதியில் எவ்வாறு இணைகின்றனர் என்பதைக் கூறிச்செல்கிறது திரைப்படம்.

இத்திரைப்படத்துக்காக லீட்டர் கணக்கில் கிளிசரின் வாங்கி குவித்திருப்பார்கள். ஏனெனில், படம் முழுவதும் கதாபாத்திரங்கள் கண்ணீர் வடிப்பதிலேயே நேரத்தை செலவு செய்கின்றனர். கதாநாயகன் சேரன் குழந்தைபோல் அடிக்கடி அழுகிறார். புஷ்பவனம் குப்புசாமியின் நகைச்சுவை பகுதிகள் எமது பொறுமையைச் சோதிக்கின்றன. பல சிக்கலான உணர்பூர்வ காட்சிகளில் இசையமைப்பாளர் இளையராஜா பின்னணி இசையை முழுதாக வெட்டி அமைதியாக்கியுள்ளார். இது அக்காட்சிகளின் அழுத்தத்தை தூக்கி நிறுத்துகிறது. "அழகி" கதாபாத்திரம் போல்லாது, இப்படத்தின் கதாநாயகன் சேரன் சிலகாட்சிகளில் மிகைப்படுத்திய நடிபபைக் காட்டுகிறார். உணர்வை வெளிப்படுத்தும் காட்சிகளில் மணிவண்ணன் - யுவராணி தம்பதியினர் சோபிக்கவில்லை.


ஆனால் ஒரு ஆறுதலான விடயம், கதாநாயகன் காற்றில் பறந்து பறந்து சண்டை செய்யவில்லை. வெளிநாட்டு பாலங்களிலும், காடுகளிலும், பஸ் நிலையங்களிலும் காதல் டூயடடுக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. காதைக்கிழிக்கும் பின்னணி இசை இல்லை. தங்கர்பச்சானிடமிருந்து மேலும் நல்ல கலைப படைப்புகளை எதிர்பார்க்கலாம். - துஷி

# ஜப்பானியர்களின் ஆகாயத் தோட்டங்கள்

அழகுணர்ச்சி மிக்க ஜப்பானியர்கள், தாவரங்களை வளர்க்கும் கலையில் பெயர் போனவர்கள். மரங்கள் வளர்க்க நிலம் இல்லாத நிலையில், தமது கட்டடக் காடுகள் நிறைந்த நகரத்தில் மரங்களை வளர்த்து அழகு பார்க்கின்றனர். அவர்கள் "வானத்தில் தோட்டங்கள்" என்ற திட்டத்தில் பெரிய கட்டிடடங்களின் மொட்டை மாடிகளில் மரங்களை வளர்க்கின்றனர்.




ஜப்பானியக் காணி, உளளக கட்டுமானத் துறை அமைச்சின் மொட்டைமாடியில் அமைந்த தோட்டம் இது.






வீட்டு மொட்டை மாடியை தோட்டமாக்கும் முயற்சியில்



அலுவலகம் ஒன்றின் மீது அமைந்துள்ள பரீட்சார்த்த ஆகாயத் தோட்டம்.

ரோக்கியோ இம்பீரியல் ஹோட்டலின் மொட்டை மாடியில் அமைந்த "ஆகாயத் தோட்டம".



கணவன், மனைவி இருவருக்குமிடையில் நல்ல அன்புத் தொடர்பை வளர்த்துக்

# உணர்வுகளைப் புரிந்தால் குடும்ப உறவுகள் வலுப்படும்!



கொள்ள வேண்டுமானால், தனது வாழ்வின் சுக்கானை மற்றவரிடம் கொடுப்பது பிழையாகும். மற்றவர் ஏதாவது கூறியதால் நான் மனம் நொந்து கொண்டால், அதன் அர்த்தம் எனது சுக்கானை மற்றவரிடம் கொடுத்து விட்டேன் என்பதாகும். மனம் நோகும்படி மற்றவர் ஏதாவது கூறினால், அவர் கூறியதில் நான் ஏதாவது திருந்த உண்டா எனப் பார்த்து- நல்லதை எடுத்து விட்டு, வேதனை ஏற்படுத்துவதை விட்டுவிடுவதே நலமாகும். அதனால் மற்றவர் புண்படமாட்டார். இல்லையேல், மற்றவர் என்னை வழி நடத்தத் தொடங்கினால், அவரது கையில் எனது சுக்கானை கொடுத்திருந்தால், நான் துக்கப்படுவேன் அல்லது கோபப்படுவேன். மனப்புண் ஏற்படத் தொடங்கியதும் இருவருக்குமிடையிலும் இடைவெளி ஏற்படத் தொடங்கிவிடும்.

இருவருக்கும் நேரங்கிடைக்கும்போதெல்லாம் தமது அனுபவம், உணர்வுகளை ஒருவர் மற்றவருடன் பகிர வேண்டும். நேரம் அதிகமாக இருந்தால் மட்டுமே மற்றவர்களைப் பற்றிக் கதைக்க வேண்டும். இல்லையேல், கணவன்- மனைவி இருவருக்கும் பிரயோசனப்படக் கூடிய விடயங்களைப் பற்றியே பகிர வேண்டும். கணவன் மனைவி இருவருக்கிடையிலும் நல்ல தொடர்பை ஏற்படுத்த, ஒருவர் மற்றவரை புரிந்து கொள்ள வேண்டும். புரிந்து கொள்ளவில்லையேல் இருவருக்கிடையிலும் உறவு முறியலாம். ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ளக்கற்றுக் கொண்டு, அதன்படி செயற்பட்டால் உறவு முறிவது குறையும் என்பதில் சந்தேகமில்லை.

மற்றவரைப் புரிந்து கொள்வது எப்படி? ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள அவரது கருத்து, எண்ணம், வாழ்க்கைப் பின்னணி, அவரது விருப்பு, வெறுப்பு, கல்வி அறிவு மட்டம் போன்றவற்றை அறிந்தால் போதுமானது என ஒருவர் கூறலாம். உண்மையில் மேற்கூறப்பட்டவற்றின் மூலம் ஒருவரை ஓரளவு புரிந்துகொள்ள முடியும். ஆனால் இவற்றைவிட, இன்னும் முக்கியமானவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.

காலையில் எம்மை நன்றாகப் புரிந்து கொண்ட ஒருவர், அன்று பகல் அல்லது மாலையில் புரிந்து கொள்ளாத சந்தர்ப்பங்களும் உண்டு. இதற்கு மற்றொரு காரணமும் உண்டு. மனிதனது விருப்பு, வெறுப்பு, கருத்துக்களை விட, மிக வேகமாக மாறக்கூடிய ஒன்றும் உண்டு. அதாவது ஒருவருடைய உணர்வு அடிக்கடி மாறக்கூடியதாகும்.

நீங்கள் இவ்விடயத்தை மகிழ்ச்சியான உணர்வோடு வாசிக்கத் தொடங்கினாலும், இவ்விடயத்திலுள்ள குறிபபுக்கள் உங்களுக்கு விருப்பமில்லாதிருப்பின் சிறிது நேரத்தில் உங்களது மகிழ்ச்சி கலக்கமான அல்லது கோபமான உணர்வாக மாறக்கூடும்.

உணர்வுகள் மாறக் கூடியவை. பெரும்பாலும் உணர்வுகள் தற்காலிகமானவையாகும். இருப்பினும், உங்களது உணர்வைப் பிழையில்லாமல் அப்படியே ஒருவர் விளங்கிக் கொள்கிறார் என்றால், அவர் உங்களைப் புரிந்து கொள்கிறார் என நீங்கள் எண்ணுவீர்கள். கணவன் மனைவி இருவரும் கலந்துரையாடும் பொழுது, உறவு ஏற்படுத்தும் பொழுது, ஒருவர் மற்றவரது உணர்வுகளைப் புரிந்து கொள்வதற்கு அதிகம் உற்சாகம் எடுக்க வேண்டும். எனது மனைவி இப்பொழுது மகிழ்ச்சியோடு கதைக்கிறாரா? அல்லது பயத்தில்ா? துக்கத்திலா? வெறுப்பிலா? கோபத்திலா? அல்லது வேறு உணர்வில் கதைக்கிறாரா? என்று அறிவதில் கவனம் செலுத்த வேண்டும்.

ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள, அவரது நிகழ்கால உணர்வைப் புரிவது முக்கியமாகும். இது ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள இருக்கும் முதற்படி மட்டுமே. ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்ள இரண்டாவது படி நிலையும் எடுக்க வேண்டும். அதாவது மற்றவரது உணர்வைப் புரிந்து கொண்டு அதை அவருக்கு வெளிப்படுத்தவும் வேண்டும். "அடுத்த வீட்டுக்காரர் உங்கள் மீது குற்றம் சுமத்தியதால் உங்களுக்கு சரியான வேதனையாக உள்ளது. அப்படித்தானே!" இவ்வாறுதான் மற்றவரில் புரிந்து கொண்ட உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இவ்வாறு வெளிப்படுத்தும்போது மற்றவர் என்னைப் புரிந்து கொண்டுள்ளார் என அவருக்கு விளங்கும். தன்னை மற்றவர் புரிந்துள்ளார் என்று ஒருவர் உணர்ந்தால், தன்னைப் புரிந்துகொண்டவருடன் மிக நெருக்கமான உணர்வை ஏற்படுத்த விரும்புவார். இதனால் கணவன், மனைவி இருவருக்கிடையிலுமுள்ள விவாக உறவு மேலும் ஆழமாகும். தன்னைப் புரிந்து கொண்டார் என்று உணர்ந்த மனைவி, கணவனுடன் மனந்திறந்து பழகுவார். தன்னைப் புரிந்துகொண்ட கணவனுடன் மனந்திறந்து பேச மனைவி பயப்பட மாட்டாள். தன்னைப் புரிந்து கொள்ளவில்லையேல் மனந்திறந்து பேச முன்வர மாட்டாள்.

எஸ்.ஜே.யோகராசா

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

சமூகம் சாக்கடைக்கும் ஒப்பானது,
தீயவர்களும் இருக்கும் வரை.

டீ கார்ப்பியோ.

# நமது நோக்கு

## எச்சரிக்கையும் தேவையே!

நாட்டில் சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும், அமைதியும் நிம்மதியும் கொண்ட சூழலில் சுமுக வாழ்வு மீண்டும் மலர வேண்டுமென - அனைவருமே விரும்பும் நிலையில் - அபஸ்வரமாய் ஒலிக்கும் குரல்களும் எழவே செய்கின்றன.

இந்த வகையில் - அகில இலங்கை பௌத்த காங்கிரஸும், சிஹல உறுமயவும் - தமது இனவாதத்தளத்தில் அறிவிப்புக்களை வெளியிட ஆரம்பித்துள்ளன.

சமஷ்டி முறைக்கு ஆதரவளித்தால், புலிகள் அதனைப் பிரிவினைக்குக் கொண்டு சென்று விடுவார்கள். தனியான பொலிஸ், நீதிமன்றங்கள், வங்கி அமைப்பைக் கொண்டுள்ள புலிகள் சமஷ்டியின் மூலம் தனிநாட்டைப் பிரகடனம் செய்வார்கள். அதற்குத் தயார்படுத்தும் முயற்சியே இதுவென - சிஹல உறுமயவின் தலைவர் திலக் கருணாரட்ண கூறியுள்ளார்.

அதேவேளை - பௌத்த மத நிறுவனங்களில் பலமிக்கதெனக் கருதப்படும், வலுவான அரசியல் செல்வாக்குடைய அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ் - ஒஸ்லோவில் அரசும் புலிகளும் செய்து கொண்ட சமஷ்டி உடன்பாடு தொடர்பான இணக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும் -

இலங்கையில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் தமது சமூக, பொருளாதார, அரசியல் தனித்துவ நிலையைப் பேண முனையும்போது - பௌத்த சிங்கள மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர் என்றும் தெரிவித்துள்ளது.

உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான, சமஷ்டிக் கட்டமைப்பிலிருந்து அரசியல் தீர்வு யோசனைகளை ஆராய்வதென்ற அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் இணக்கப்பாட்டிற்கு - சர்வதேசம் தழுவியதாகப் பெரும் ஆதரவு கிடைத்துவரும் நிலையில்,

இத்தகைய எதிர்ப்புக் குரல்கள் - பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் எச்சசொச்சங்கள் இன்னமும் திருந்தவிடவில்லை, தணிந்துவிடவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றன.

கடந்த காலங்களில் - தமிழர்களுக்கான உரிமைகளை வழங்குவது பற்றி உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டபோதெல்லாம் - மிக மூர்க்கமான முறையில் பௌத்த சிங்களப் பேரினவாதம் அவற்றை எதிர்த்ததோடு மட்டுமல்லாது, சிங்கள மக்களிடையே தமிழர்களுக்கு எதிரான உணர்வுகள் ஆழமாக வேரூன்றவும் வழி செய்தது.

இந்த வகையில், தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையிலான பிரிவினையைத் தீவிரம் பெறச்செய்த சக்திகளாகவே - பௌத்த சிங்களப் பேரினவாத அமைப்புக்கள் நடந்துகொண்டன.

தனியே மத ரீதியானதாக மட்டுமல்லாது - தென்னிலங்கை அரசியலிலும், அரசியல் தலைமைத்துவங்களிலும் - பௌத்த சிங்களப் பேரினவாதக் கருத்தியல் வலுவான முறையில் உட்பதிந்ததாகவே, வெளிப்பாடுகள் அமைந்திருந்தன.

தமிழ் மக்களை - இரண்டாந்தரப் பிரஜைகளாகவும், ஆக்கிரமிப்பாளர்களாகவும் சித்திரிப்பதன் மூலம் - தமிழ் மக்களின் பிரச்சினையை, அரசியல் பகடைக்காயாக்கி அரசியல் ஆதாயம் தேடுவதற்கு பௌத்த சிங்களப் பேரினவாதம் தகுந்த கருவியாகவே திகழ்ந்தது.

சாதாரண சிங்கள மக்கள் முதல் ஜனாதிபதி வரை- ஆயுதப் படைகள் உள்ளடங்கலாக, காலத்துக்குக் காலம் - பௌத்த சிங்களப் பேரினவாதச் சிந்தனை புத்தாக்கம் பெற்றெவந்துள்ளது.

இத்தகைய வரலாற்றோட்டத்தில் மீண்டும் - பௌத்த சிங்களப் பேரினவாதத்தினை துணைக்கழைக்கும் கைங்கரியமாகவே சிஹல உறுமயவினதும், அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸினதும் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

இன்றைய அரசியல் சூழலில் - இத்தகைய அமைப்புக்களின் செல்வாக்கு, சிங்கள மக்கள் மத்தியில் எத்தகைய தாக்கத்தை விளைவிக்கும் என்பது சந்தேகத்துக்குரியதாகவிருந்தாலும் -

பௌத்த சிங்களப் பேரினவாதப் போக்கு என்பது மிகவும் உணர்வுமயமானது, மிக எளிதில் பரவலாக்கம் செய்யக்கூடிய வகையில் உள்ளார்ந்த தன்மைகளைக் கொண்டிருப்பது என்பதால் - சற்று எச்சரிக்கை தேவையாகவே உள்ளது.

தெற்கில் நிலவிவரும் அரசியல் நெருக்கடிகளுக்குள், தமிழர்களுக்கு எதிரான உணர்வுகளைத் தேடித் தூண்டக்கூடிய அரசியல் சக்திகளும் உள்ள நிலையில் இந்த எச்சரிக்கையின் தேவை வேண்டியதானதே என்பதும் யதார்த்தமாகும்.

# திரியாயில் கடற்படைமுகாம் விஸ்தரிப்பு: குடியமர வரும் மக்களுக்கு நெருக்கடி!

திருகோணமலை மாவட்டத்திலுள்ள திரியாயில் கடற்படையினர் புதிதாக முகாமை அமைத்து வருவதால் - அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர்.

திரியாயில் தமிழ் மகாவித்தியாலயத்திலிருந்த படையினர், புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர், அங்கிருந்து வெளியேறினர். இப்போது அவ்விடத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் கடற்படையினர் புதிய முகாமை அமைத்து வருகின்றனர்.

மீளக் குடியமர்ந்த மக்கள் குடியிருப்புக்களை அண்டி, கடற்படையினர் இராணுவவேலியை அமைத்து வருகின்றனர்.

அத்துடன் இப்பகுதியில் வயல்களுக்குச் செல்லும் மக்கள் கடற்படையினரால் சோதனையிடப்பட்டு வருகின்றனர்.

இதனால் திரியாயில் ஆண்கள் மட்டும் இரவு நேரங்களில் தமது வீடுகளில் தங்குவதாகவும், குடும்பத்தினர் - அகதி முகாம்களிலேயே தங்குவதாகவும் தெரியவருகின்றது.

திரியாயில் 11,500 ஏக்கரில் விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இங்கு 400 ஆண்கள் மட்டுமே தொழிலுக்கு வந்து செல்கின்றனர். காலையில் வரும் இவர்கள், மீண்டும் மாலையில் தமது குடும்பத்தினர் தங்கியிருக்கும் நிலாவெளி, கும்புறுப்பிட்டிப் பகுதிகளுக்குத் திரும்பிவிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவோருக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும்!

## மீன்பிடி அமைச்சர் மகிந்த விஜேசேகர

(கொழும்பு)

சட்டவிரோதமான முறைகளைப் பின்பற்றி கடலில் மீன்பிடித்தலில் ஈடுபடுவோர் மீது, கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவிருப்பதாக மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மீன்வளம் வெகுவாக அருகி வருகின்றது. இந்த நிலை தொடருமேயானால் அடுத்த 20 வருடங்களில் இலங்கையின் மீன்வளம் முற்றாக அருகிவிடும் ஆபத்துத் தோன்றியுள்ளது. இதற்கு ஆழ்கடல் மீன்பிடித்தலில் ஈடுபடுவோர் வெடிமருந்துகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதே காரணமாகும்.

மீன்வளம் அழிக்கப்படுவது மட்டுமன்றி, அவற்றின் எதிர்கால வளர்ச்சி வாய்ப்புக்களும் இதனால் தடுக்கப்படுகின்றன. இதனால் சட்டவிரோத முயற்சிகளைப் பின்பற்றி மீன் பிடிப்பவர்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடித்தலில் ஈடுபடுவோருக்கு ஆகக்கூடுதலாக 3 வருட சிறைத்தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதிக்கப்படும் - என அமைச்சர் மகிந்த விஜேசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானிய அரசு வழங்கும் உதவிகள் ஏனைய நாடுகளுக்கு நல்ல சமிக்ஞை!

## பிரதமர் ரணில் ஜப்பானியப் பல்கலைக்கழகத்தில் பேச்சு

இலங்கையின் புனர்வாழ்வு, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென, ஜப்பானிய அரசாங்கம் அளிக்க முன்வந்துள்ள உதவிகள் மற்ற நாடுகளுக்கு ஆக்கபூர்வமான சமிக்ஞையை வெளியிட்டுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜப்பானின் கியோட்டோ நகரத்தில் 'றிட் சுமைகான்' பல்கலைக்கழகத்தில், 'உலகின் 21 ஆம் நூற்றாண்டில் இலங்கையும் ஜப்பானும்' என்ற தலைப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறப்புரை ஒன்று ஆற்றியிருந்தார். இதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையும் ஜப்பானும் இணைந்து சமாதான மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதனூடாக இலங்கையில் உள்ள அனைத்து மக்களினதும் ஜனநாயக, மனித உரிமைகளையும் சட்டத்தையும் பாதுகாக்க முடியும்.

ஜப்பானிய உதவியால் அமைதியைப் பெறுவது மட்டுமன்றி நாட்டையும் அபிவிருத்தி செய்ய முடியும். சமாதான முயற்சியிலிருந்தும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் வலுமிக்க சமிக்ஞைகள் கிடைத்து வருகின்றன.

ஜப்பானிய அரசாங்கம் வழங்குகின்ற உதவியால் 2015 ஆம் ஆண்டில் தென்னாசியப் பிராந்தியமே முழு சுதந்திர வர்த்தக வலயமாக மாறும் என்றும் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை - இலங்கை அரசாங்கம் ஜப்பானிய அரசுடன் நெருக்கமாகச் செயற்படுவதானது, சமாதான முயற்சிகளை எதிர்க்கும் பௌத்தமத சக்திகளை - பௌத்த பின்னணி கொண்ட ஜப்பான் மூலம் சமாளித்துக் கொள்ள வாய்ப்பானதாக அமையும் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# மருதங்கேணி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வழங்கப்படும்!

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலைக்கு நிக்கோட் நிறுவனத்தால் அம்புலன்ஸ் வண்டியொன்று வழங்கப்படவுள்ளது.

மருதங்கேணி கிராமிய வைத்தியசாலை வாரத்தில் இரண்டு நாட்கள் நடமாடும் சேவையாக நடைபெறுகின்றது. மிகுதி நாட்களில் அவசர நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டியொன்று தேவையென மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை நிக்கோட் நிறுவனத்திடம் கோரியதற்கு இணங்க, அம்புலன்ஸ் வண்டியொன்று தருவதாக உறுதியளிக்கப்பட்டுள்ளது. (17)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பனம்பொருள் விற்பனை நிலையம்!

(ஊரெழு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய விற்பனைப் பகுதியில் பனம்பொருள் உற்பத்தி விற்பனை நிலையமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கத்தின் பொதுமுகாமையாளர் சோ.கோகுலதாஸன் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருட ஆரம்பத்தில் இந்த விற்பனை நிலையம் இயங்கத் தொடங்கும் எனத் தெரியவருகிறது. கடந்த காலங்களை விட இவ்வருடம் பனம்பொருட்களின் உற்பத்தி, விற்பனைகள் அதிகரித்துள்ளன. தற்போது மேற்படி உற்பத்திகளை விற்பனை செய்யும் நிலையமொன்று கதிர்காமத்தில் ஆரம்பிக்கப்பட்டு விற்பனைகள் அமோகமாக நடைபெற்று வருகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச விமான நிலைய விற்பனைக்கிளையினூடாக சர்வதேச நாடுகளுக்குப் பனம் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. (96)

# திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலிலிருந்து இராணுவத்தினர் வெளியேற வேண்டும்!

## ஆலயத் திருப்பணிச்சபை படைத் தலைமையகத்திற்குக் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் - திருக்கேதீஸ்வரம் ஆலயச் சூழலில் இருந்து படையினரை வெளியேற்றுமாறு ஆலயத் திருப்பணிச்சபை படைத் தலைமைப்பீடத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆலயச் சூழலைத் தவிர அருகில் உள்ள கிராமங்களில் இருந்தும் படையினர் வெளியேற வேண்டும் என இக்கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயச் சூழல் மற்றும் - அதனை அண்டியுள்ள பெரிய நாவற்குளம், மூலைத்தோட்டம், நாகதாழ்வு, முள்ளிப்பள்ளம் போன்ற கிராமங்களில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

இவர்கள் இப்பகுதியில் புதிய படை முகாம்கள் மற்றும் காவலரண்களை அமைத்து வருகின்றனர். இதனால் ஆலயத் திருப்பணி வேலைகளைச் செய்வதில் பல சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. எனவே ஆலயச் சூழலில் இருந்து படையினரை வெளியேறுமாறு திருப்பணிச் சபை கோரிக்கை விடுத்திருக்கின்றது.

அத்துடன் இது தொடர்பான உண்மை நிலையை அறிந்து கொள்ள - தென்பகுதி ஊடகவியலாளர்களை திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு வருகை தருமாறும் திருப்பணிச்சபை கோரிக்கை விடுத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கான பணத்தை விளையாட எவரையும் அனுமதிக்கப் போவதில்லை

**ஒஸ்லோவில் நடைபெற்ற மாவீரர் நினைவு நிகழ்வில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நிகழ்த்திய உரையின் இறுதிப்பகுதி.**

தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதை விரும்பாவிட்டால் - எங்களுடைய மக்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், ஒரு நியாயமான, நீதியான ஒரு தீர்வைத் தாங்கோவென்றுதான் நாங்கள் கேட்டுக் கொண்டு வந்தனாங்கள். அவர்கள் அதனைத்தர மறுத்தார்கள். மாற்றுத்திட்டத்தை நாங்களே முன்வைக்கிறம், சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில். சுயநிர்ணய உரிமை என்னும்போது உள்ளீட்டான சுயநிர்ணய உரிமையென்றொன்று இருக்கின்றது. அது ஐ.நா. சாசனத்தில் உள்ளது. உணர்ச்சிவசப்பட்டு சும்மா கோசங்கள் வைத்துக்கொண்டு போகேலாது. சர்வதேச சட்டங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நெறிமுறைகளால்தான் நாம் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இதன்படிதான், சுயநிர்ணய உரிமையை ஐ.நா. சாசனத்திலிருந்து எடுக்கிறம். எமது மக்களிற்கு, எமது தாயகத்தில், தம்மைத்தாமே ஆளக்கூடிய ஒரு சுயாட்சி உரிமையை, அதையாவது - தலைவரின் மாவீரர் உரையில் அது தெளிவாகச் சொல்லப்பட்டதை, இந்தமுறை சமீபத்தில் நடைபெற்ற பேச்சுக்களில் நாங்கள் வெளிப்படையாகவே கேடடோம். சமஷ்டி ஆட்சி முறை - சமஷ்டி ஆட்சி அதையாவது தாருங்கள். தாயக நிலம் எமக்குச சொந்தம். நாங்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்த பூமியை, அங்கீகரியுங்கள். வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழ்பேசும் மக்களின் தாயகபூமி. இங்கு இஸ்லாமிய மக்கள் வசிக்கின்றார்கள். எங்களிற்கு சொந்தமான வடக்குக் கிழக்கைத் தாருங்கள். தனியொரு சுயாட்சி அமைப்பை உருவாக்குங்கள் என்றோம். இதை ஐம்பது ஆண்டுகளிற்குப் பின்னர்தான் சிங்கள அரசு அங்கீகரித்துள்ளது. தயவு செய்து இதனை வடிவாக் கேளுங்கோ. ஐம்பது வருடங்களிற்கு பின்னர் நேற்றுமுன்தினம்தான் சிங்கள அரசு, தமிழரின் சுயாட்சி கொள்கையை அங்கீகரித்துள்ளது. சரி, நல்ல விசயம். எங்கட தலைவர் சொல்லுறார், இதுதான் கடைசிச் சந்தர்ப்பம். இந்தச் சுயாட்சி உரிமை தராமல், சிங்கள இனம் எமது மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டால்..... நாங்கள் வெளியீட்டான சுயநிர்ணய உரிமை அதாவது, நாம் பிரிந்து சென்று தனியரசு அமைப்பதற்கான உரிமையுடன் போராடுவோம் என்று தெளிவாகச் சொல்லப்பட்டது. ஆகவே, இது இறுதியாயுதம், கடைசி ஆயுதமாக தமிழீழக் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. இப்பொழுது சிங்களவர்தான் இதற்கொரு முடிவெடுக்க வேண்டும். நாங்கள் எங்கட முடிவைச் சொல்லிப்போட்டம். இதுதான் விசயம். ஒரு தனிநாட்டிற்குள் இரண்டு பேரும சேர்ந்து வாழலாம். ஆனால்.., எங்களிற்கு பரிபூரணமான, எம்மையே நாம் ஆளக்கூடிய, சுதந்திரமான, கௌரவமான, அரச அமைப்பான கூட்டமைப்பை உருவாக்கிக் கொளவோம். அதற்கு நீங்கள் தயாரா?

சிறிலங்கா அரசாங்கமும் விடுதலைப் புலிகளுமாகச் சேர்ந்து கூட்டறிக்கையை வெளியிட்டன. இதனைப் பல நாடுகள் பாராட்டின. ஆனால், இது ஏதோ போராட்டம் முடிவிற்கு வந்து விட்டது, தீர்வு கிட்டிவிட்டது, இதோட பிரச்சினை தீர்ந்துவிட்டதென்று சொல்வதற்கில்லை. இப்பொழுதுதான் இரண்டு தரப்பும் சேர்ந்து, ஒரு பொதுவான தீர்வுத்திட்டத்தை பரிசீலனை செய்வதாக முடிவு செய்துள்ளோம். இனி, கன விசயங்கள் இருக்கு. எப்பிடியான சமஷ்டி ஆட்சி, எந்தளவிலான அதிகாரங்கள் தமிழ் மக்களிற்கு இருக்க வேண்டும். சிங்கள தேசத்திற்கும் தமிழர் தேசத்திற்கும் உள்ள உறவு எப்பிடியிருக்க வேண்டும். மத்திய ஆட்சிக்கும் பிரதேச ஆட்சிக்குமுள்ள அதிகாரப் பகிர்வு எப்படியிருக்க வேண்டும். இப்படியான பல பிரச்சினைகள் உள்ளன. இதைப் பற்றித்தான் இனிப்பேசவேண்டும். இப்ப நாங்கள் சொல்லியிருக்கிறம், என்னவென்றால்..... பல உலகநாடுகளில் இந்த சமஷ்டி ஆட்சிமுறை இருக்கு. எங்கயெங்கையெல்லாம் சமஷ்டி ஆட்சிமுறை இருக்கெண்டு பாருங்கோ. அமெரிக்கா, கனடா, சுவிஸ்லாந்து, ஜேர்மனி, இந்தியா, அவுஸ்ரேலியா இங்கையெல்லாம் சமஷ்டி ஆட்சி முறையிருக்கு. உலகத்தில் 20 நாடுகளுக்கு மேல சமஷ்டி ஆட்சி முறை இருக்கு. இப்ப இதுக்கையெல்லாம் நாங்கள் திரியவேண்டும். எடுத்த எடுப்பில் சமஷ்டியென்று போகேலாது... இந்த நாடுகளிற்கெல்லாம் போக வேணும். ஏனென்றால், எங்கயெங்க சமஷ்டி ஆட்சிகள் இருக்கோ.... எந்தெந்த நாடுகளில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற்றிருக்கோ, அங்க நாங்கள் போக வேண்டும். அங்கையெல்லாம் எங்களிற்கு தடை போடப்பட்டிருக்கு. கடந்த ஏழுவருசமா கள்ளக் கதிர்காமர் செய்த இராஜதந்திரம் இப்ப உடைக்கப்படுகின்றது. புலிகளை நாடுகள் வரவேற்கின்றன.

நாளைக்கு நாங்கள் சுவீஸ் போறம். கனடா எங்களை அழைக்கிறதிற்கு முடிவெடுத்துள்ளது. இப்பிடி அமெரிக்காவிற்கும் போவம். இனி, நாங்கள் எங்கள் மீதான தடையை நீக்குமாறு ஒவ்வொரு நாடுகளையும் வலியுறுத்துவம். அப்ப ஆரின்ர கிட்னி இப்ப உற்சாகமாக வேலைசெய்யுது. பாலசிங்கத்தின்ரையா? கதிர்காமரின்ரையா? ஒரு போராளியின்ர கிட்னி என்னிடமிருக்கு. கதிர்காமரைத் துரத்திற வரைக்கும் இது நிக்காது. இன்னுமொரு பிரச்சினை இருக்கு. ரணில் விக்கிரமசிங்கவின்ர அரசு, இதனால இதத் தர முடியுமா? கொழும்பில - சந்திரிகா அக்காவின்ர ஆட்சி, ரணில அண்ணாவின்ர ஆட்சி, ரெண்டுக்குள்ளையும் புடுங்குப்பாடு. அவவிடம்தான் முழுமையான நிர்வாக அதிகாரம் இருக்கு. அவதான் அங்க அல்லிராணி. ரணில பாராளுமன்றத்தைக் கட்டிப்பிடிச்சுக் கொண்டிருக்கிறார். இவரோட நிற்கிற கட்சியளுக்குள்ள குத்துவெட்டு, முஸ்லிம் காங்கிரசிற்குள்ள உட்பூசல், அப்பிடியிருக்கும்போது புலிகளின்ர கோரிக்கையை எப்படி நிறைவேற்றுறது? இதொரு பிரமாண்டமான பிரச்சினை. சிங்களவரிற்கு நாங்கள் பந்தத்தூக்கி அவையின்ர காலுக்க எறிஞ்சு விட்டம். நாங்கள் இனி நிம்மதியா இருப்பம். சமஷ்டி ஆட்சி முறையைக்கொண்டு வாறதெண்டு சொன்னால், ஒரு புதிய அரசியல் யாப்பைக் கொண்டுவரவேண்டும். இப்பயிருக்கிற அரசியல் நிலைமையில், இப்படியான தீர்வுகளை கொண்டுவர முடியாது. 1972 ஆம் ஆண்டும், 1978ஆம் ஆண்டும் கொண்டுவரப்பட்ட அரசியல் யாப்பு என்பனவற்றை தமிழ்மக்கள் அங்கீகரிக்கவில்லை. தமிழ் மக்களின் அங்கீகாரத்துடன்தான் அவை கொண்டு வரப்படவேண்டும். இனிக் கொண்டுவாற புதிய யாப்பு, அரசியல் அமைப்பு, சமஷ்டி அமைப்பாக இருக்க வேண்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவில் இது நிறைவேற்றப்பட வேண்டும். சர்வஜன வாக்கெடுப்புச் செய்யப்பட வேண்டும். இதனை சிங்கள மக்கள் செய்ய வேண்டும்: எங்களத திருப்திப்படுத்திறதென்று சொன்னால், நாங்கள் சொல்லிப்போட்டம், இதுதான் எங்களிற்குத் தேவையென்று. அடுத்தமுறை உலகநாடுகளிற்கெல்லாம் போவம். தமிழ் மக்களிற்கு சமஷ்டி முறையான ஆட்சியொன்றை கொடுப்போம். புதிய யாப்பைக் கொண்டுவந்து இப்பிடியிப்பிடி செய்யவேண்டியது உங்கட பொறுப்பு. இந்தத் தீர்மானத்திற்கு சில இனவாதச் சக்திகள் இது பிழையென்று துதிபாடுகினம். நாங்கள் பெரியபடையை வைத்துக் கொண்டு, ஒரு இராணுவக்கட்டமைப்பை வைத்துக்கொண்டு சமஷ்டி கேட்கிறம். சுயாட்சியோட ஒரு இராணுவமும் இருப்பதென்றால், அது தனி ஆட்சிதானே? அம்மா - 1995, 2000 காலப்பகுதியில பெட்டகம் வைத்திருந்தா. அதிலையும் சமஷ்டிதான் குடுத்ததாம், அதனைப் புலிகளும், ரணில் விக்கிரமசிங்கவும் நிராகரிச்சினம், இப்ப பழையபடி சமஷ்டி என்று வருகினம் எண்டு அவ சொல்லுறா. இவ, என்னென்ன செய்தாவென்றால் - நீலன் திருச்செல்வம், பீரிஸ் ஆகியோரைப்பிடிச்சு ஒரு பெட்டகம் ஒன்றைச் செய்து, அத வைச்சு அஞ்சு வருசமா விவாதிச்சினம். என்ன விவாதிச்சினமென்றால், அதில ஆரம்பத்தில இருந்த உரிமையள ஒவ்வொன்றாக வெட்டி அந்த பெட்டகத்தில் சதையும் தோலும் எடுத்து, வெறும் ஓடாக இருந்தது. இந்தப் பெட்டகத்தை ஆதரித்த கூட்டணிகூட, அதனை ஏற்க மாட்டோமென்று சொன்னது. சம்பந்தரையாவது கேட்டாத் தெரியும். சம்பந்தரே பெட்டகத்தை வேணாமென்று சொல்லேக்குள்ள, எங்களப்போல இளைஞர்கள்..... மேலால பார்த்தா சமஷ்டி மாதிரித் தெரியும். உள்ளுக்க ஒண்டுமில்ல. இதுக்கு யாழ்ப்பாணத்தார் ஒரு பழமொழி வைத்திருக்கினம். ‘வாய்க் கட்டுப் பலம் பெட்டி கிழிசல்’ அப்பிடித்தான் அம்மாவின்ர பெட்டகமும்.

அடுத்தகட்டப் பேச்சு தாய்லாந்தில எல்லோ வந்து பேசச் சொல்லியிருக்கினம். அதுக்கடுத்து ஜப்பான் முன்வந்தது, தங்கட நாட்டில வந்து பேசச்சொன்னது. ஏனென்றால், ஜப்பான் இந்தப் பேச்சுவார்த்தையில் அக்கறை காட்டி, வடக்கு-கிழக்கில் பொருளாதாரப் பிரச்சினைகளை தாங்கள் சுமந்து, பெரியளவில உதவி செய்யிறதா சொல்லியிருக்கு. ஜப்பானில பேச்சு. பிறகு, தென்னாபிரிகாவில. தென்னாபிரிக்காவில நெல்சன் மண்டேலா சொல்லியிருக்கிறார், இருதரப்பினரையும் நான் வந்து நேரடியாகப் பார்த்து ஊக்கமொன்று தர விரும்புறன் என்று சொல்லியிருக்கிறார். அது நல்லதொரு விசயம். அதுக்கப்புறம் எங்ககொண்டே சேர்க்குமோ தெரியேல்ல. நாங்களும் இழுபட்டுத் திரிவம்.

முக்கியமாக சொல்லுவதென்றால், விடுதலைப் புலிகள் அமைப்பு சமாதானப் பாதையைத் தழுவி நிற்கின்றோம். தீர்வு காண வேண்டுமென்று நிற்கின்றோம்.



இதனை உலகம் அங்கீகரிக்கத் தொடங்கி விட்டது. உலகநாடுகள் மத்தியில் எங்களிற்கு சாதகமான நிலை பெருகிவருகின்றது. எம்மைப் பயங்கரவாதிகள், பிரிவினைவாதிகள், வன்முறையாளர்கள் என்று சொல்லி ஒதுக்கிய நாடுகள் - முன்னுக்கு வந்து, தங்கட நாடுகளிற்கு வரச் சொல்லி மதிப்புத் தருகினம். இதொரு முக்கியமான விசயம், எமது மக்களையும், போராட்டத்தையும் பொறுத்தவரையில். ஆகவே, இந்த நேரத்தில் நிறைய நாடுகள் உதவி செய்ய முன்வந்துள்ளன. உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் எழுபது மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இரண்டு மாதங்களின் பின்னர் ஜப்பானிலும் உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறவுள்ளது. இதில் எழுபது, எண்பது நாடுகள் பங்குபற்றவுள்ளன. வடக்கு - கிழக்கின் பொருளாதார நிர்மாணத்திற்காக உதவி வழங்க பல நாடுகள் முன்வரவுள்ளன. இந்தப் பணமெல்லாம் எமது மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கானது. உங்களிற்குத் தெரியும், எமது பிரதேசம் போரினால் அழிவுக்குள்ளாகியுள்ளது. எல்லாம் சிதைந்து போயுள்ளன. இரண்டாம் உலக யுத்த அழிவுகளிலும் மோசமாக.. அழிந்து போயுள்ளன. போரைச் சாட்டாகப் பயன்படுத்தி, தமிழரின் வளங்களை சிறிலங்கா இராணுவம் அழிச்சிருக்கு. அதாவது, தமிழீழ மக்கள் தலைநிமிர்ந்து நிற்க முடியாத அளவிற்கு, பேரழிவை மக்கள் மத்தியில் கட்டவிழ்த்து விட்டுள்ளனர். சிதைந்து போயிருக்கும் எமது தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும். இதற்கு உலகம் முன்வந்து நிற்கின்றது. நாங்கள் ஒரு அமைதி நிலையை ஏற்படுத்தி, உலகநாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்று, உலகத்தால் ஏற்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்குத்தான் அந்தப் பணம் பயன்படும். இதற்குள் பணத்தை விளையாட விடமாட்டோம். நாங்களும் இதனைக் கண்காணிப்போம். கொள்ளையடிக்காமல் பார்த்துக்கொள்வோம். மக்கள் பயனடைந்தால் காணும். பெரிய விடுதலை அமைப்பு உள்ளது. அதற்கு புலம் பெயர்ந்த மக்கள்தான் தீனிபோட்டுவாறீர்கள். உலக நாடுகளிடமிருந்து பணம் போகுதென்று இதனைக் கைவிட முடியாது. அரசனை நம்பி புருசனைக் கைவிட ஏலாது. என்னை ஒவ்வொரு நாடுகளிலும் மேடையேறச் சொல்லுகிறார்கள். சொன்னதைத்திரும்ப சொல்லேலாது தானே. கருணா அம்மான், தமிழ்ச்செல்வனை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு நாடுகளிற்கும் போக வேண்டியிருக்கின்றது. அதுல பிரச்சினையென்னன்டா இவைய ளோட திரிய எனக்கு விருப்பமில்ல. காரணம் இவங்களோட போனால் கிழவியள் கூட என்னைத்திரும்பிப் பாக்கினம் இல்லை.

☆

## படை விலக்கம், மீள் குடியமர்வு இயல்பு வாழ்க்கைக்கு அவசியம்!

### ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஸ் அணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கில் புனருத்தாரணப் பணிகள் திட்டமிட்டபடி செவ்வனே நடக்கவேண்டுமெனில்-உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, மக்கள் சுதந்திரமாக மீளக்குடியேற வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், காணாமற்போனோர் தொடர்பான தீர்மானகரமான பதில் ஒன்றை அரசு வெளியிட வேண்டும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (சுரேஷ் அணி) வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

இவ் அறிக்கையில் மேலும்- அரசாங்கமோ, ஜனாதிபதியோ, தமிழ்மக்களோ எதிர்பாராத வகையில் பேச்சுவார்த்தை முனைப்புப் பெற்றுள்ளது. அரசியல் ரீதியாக முக்கியமாகக் கருதப்பட்ட அடிப்படை விடயங்களும் பேச்சு வார்த்தைக்கு எடுக்கப்பட்டு, உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி அடிப்படையிலான பிரதேச சுயாட்சியை உருவாக்குவது என்றும் தமிழ் தரப்பாலும், அரச தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அதேசமயம், சர்வதேச நாடுகள் கலந்துகொண்ட ஒஸ்லோ மாநாட்டில் முதற்கட்டமாக எழுபது மில்லியன் அமெரிக்க டொலர்களை வட-கிழக்குப் புனருத்தாரண விடயங்களுக்குத் தருவதாகவும் அந்நாடுகள் சம்மதம் தெரிவித்தன. அடுத்த வருட நடுப்பகுதியில் ஜப்பானில் நடைபெறவிருக்கும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் இன்னும் அதிகளவிலான நிதி கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனால் இவற்றை முழுமையாகப் பயன்படுத்தக் கூடிய சூழல் ஏற்பட்டுவிட்டதா? என்பதே பெரிய கேள்வியாக உள்ளது. உயர் பாதுகாப்பு வலயங்களும், மக்கள் மத்தியிலான இராணுவ முகாம்களும் இன்னும் அப்படியே இருக்கின்றன. யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பகுதி இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களாக உள்ளன. வடக்கிலும், கிழக்கிலும் அகதி முகாம்களும் அப்படியே இருக்கின்றன. இந்நிலையில் புனருத்தாரணம், புனர்நிர்மாணம், மீள்குடியேற்றம் என்பதன் அர்த்தம் என்னவென அரசு புரிந்துகொண்டுள்ளது என்பது புரியவில்லை.

ஒரே நாட்டிற்குள் சமஷ்டி முறையிலான பிரதேச சுயாட்சிதான் தீர்வென்பதை ஏற்றுக்கொண்ட பின்னர், யுத்த நிறுத்தம் ஏற்பட்டு ஒரு வருடம் ஆகி உள்ள நிலையில், ஏன் இந்த இராணுவ முகாம்கள், உயர் பாதுகாப்பு வலயங்கள். பேச்சுவார்த்தை மிகப்பெரிய முன்னேற்றத்தைக் கண்ட பின்னரும் ஆயுதப் படைகளைப் பரவலாக நிலைகொள்ள வைப்பது என்பது அரசின் ஒரு பகுதியினருக்கு-பேச்சு வார்த்தை மீதுள்ள நம்பிக்கையீனத் தையே காட்டுகின்றது. இல்லையேல் சமஷ்டி அமைப்பு முறை, பிரதேச சுயாட்சி ஆகியவற்றைக் கூட வழங்க இவர்கள் முன்வருவார்களா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றது.

இது மாத்திரமல்ல யாழ்ப்பாணத்தில் காணாமற் போனோரின் பெற்றோரும் தமது பிள்ளைகளின், உடன்பிறப்புக்களின் நிலை என்னவென்று தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றார்கள். சமாதானம் ஏற்பட்டு வரும் இச்சூழ்நிலையில் இழந்துபோன தமது உறவுகளைப் பற்றி அவர்கள் அறிந்து கொள்ளத் துடிப்பது, எல்லோராலும் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியுள்ளதாகும். பல விசாரணைகள் நடந்தும் இதுவரை காணமற் போனோர் தொடர்பாக அரசு திட்டவட்டமான பதிலைச் சொல்லாமல் இருப்பது கண்டிக்கத்தக்கது. இவர்கள் தொடர்பான தீர்மானகரமான பதிலொன்றைக் கூறுவதன் மூலமே இவர்கள் நஷ்ட ஈட்டையோ, வெறெதாவது நிவாரணங்களையோ பெற்றுக் கொள்ளமுடியும்.

எனவே, வட-கிழக்கில் நிவாரணப் பணிகளும், புனருத்தாரண, புனர்நிர்மாணப் பணிகளும் திட்டமிட்ட அடிப்படையில் செவ்வனே நடக்கவேண்டுமெனில், உயர் பாதுகாப்பு வலயங்கள், இராணுவ முகாம்கள் என்பன உடனடியாக அகற்றப்பட்டு, மக்கள் சுதந்திரமாக மீளக்குடியேறும் சூழல் உருவாக்கப்பட வேண்டும் என்பதுடன், காணாமற்போனோர் தொடர்பாகவும் தீர்மானகரமான பதிலொன்றை அரசு முன்வைக்க வேண்டும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அரசை வற்புறுத்திக் கேட்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசு - புலிகள் இணக்கம் கோபி அனான் வரவேற்பு

(நியூயோர்க்)

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கம் தொடர்பாக, ஐ.நா.பொதுச் செயலாளர் கோபி அனான் பாராட்டும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக கோபி அனானின் பேச்சாளர் பிரெட்எெட் வெரியட்ஸ் தெரிவிக்கையில்,

அரசாங்கம் மற்றும் புலிகள் தரப்புக்கள் அமைதி முயற்சிகளுக்கு அர்ப்பணிப்புடன் ஆதரவளிப்பதும் நோர்வே, மத்தியஸ்தப் பணியில் ஈடுபட்டிருப்பதும் பாராட்டுக்கும் கௌரவத்துக்கும் உரியது.


3ஆவது சுற்றுப் பேச்சுக்களில் எட்டப்பட்ட முடிவுகள் வரவேற்புக்குரியது. உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி அமைப்பு முறையில், ஒன்றுபட்ட இலங்கைக்குள் தீர்வு காண இரு தரப்பும் இணங்கியிருப்பது, சமாதானத்துக்கான நல்ல அறிகுறியாகும்.

இந்த முடிவு எதிர்காலத்தில் சகல சமூகங்களுக்குமான - ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித் தீர்வு ஒன்றினை வழங்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது என ஐக்கிய நாடுகள் சபை பொதுச்



செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## காற்றினால் வீழ்ந்த மரம்; வோர்ட் நடைபாதை சேதம்



யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவு வீசிய பலத்த காற்றினால் யாழ். போதனா வைத்தியசாலைக்குள் நின்ற மரம் முறிந்து வைத்தியசாலை நடைபாதைக் கூரை மீது விழுந்து கூரை சேதமடைந்துள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலையின் 15ம், 16ம் சிகிச்சை அறைகளுக்கு செல்லும் நடைபாதை மீது, அருகிலிருந்த மரமே இவ்வாறு விழுந்து நடைபாதைக் கூரையைச் சேதமாக்கியுள்ளது. (லி)

## கரவெட்டி பிரதேச செயலராக கனகரத்தினம்

கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு புதிய பிரதேச செயலராக கந்தையா கனகரத்தினம் நேற்று முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வரை காலமும் பிரதேச செயலாளராக கடமையாற்றிய எஸ்.ஸ்ரீனிவாசன் சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (13)

## இளம் குடும்பஸ்தர் வவுனியாவில் மர்ம மறைவு

வவுனியா நகரப்பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போயுள்ளார்.

வவுனியா நகரத்திற்கு அண்மையில் வசித்து வந்த இவர் வவுனியா நகர்ப்புறத்தில் தனக்கு அவசர வேலையொன்று இருப்பதாகத் தன் மனைவியிடம் கூறிவிட்டு கடந்த வியாழன் புறப்பட்டவர் இன்னமும் வீடு திரும்பவில்லை.

அண்மையில் வவுனியா நகரப்பகுதியில் சிறுமி ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டதும் ஆடு மேய்க்கச்சென்ற பெண்ணொருவர் கொலை செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (34)

# தென்மராட்சியில் மீளக்குடியமர்வதற்கு பெரும் போராட்டம் நடத்த தீர்மானம்!

### கோவிலாக்கண்டியில் நடந்த கூட்டத்தில் ஆராய்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி தெற்கில் உள்ள தனங்களப்பு, மறவன்புலோ மற்றும் கைதடி - நாவற்குழி தெற்கைச் சேர்ந்த மக்கள், தம்மைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்கக் கோரிப் பெரும் போராட்டம் ஒன்றை நடாத்த ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் கோவிலாக்கண்டி மகாலக்சுமி வித்தியாலயத்தில் கூடிய இப்பிரதேச மக்கள்- இம்மூன்று பிரிவுகளைச் சேர்ந்த கிராம அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி மற்றும் விவசாய சம்மேளனத் தலைவர் ஆகியோருடனான சந்திப்பொன்று நடைபெற்றது. இதன் போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

இம் மகஜர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த அ.விநாயகமூர்த்தி - தான் இது தொடர்பாக இன்று பல தரப்பினருடனும் பேச்சு நடாத்துவதாகவும், சாதகமான பதில் கிடைக்காது விட்டால் தானும் இப்போராட்டத்தில் மக்களுடன் இணைந்து செயற்படப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (29)

# இழப்பீடுகள் எமக்கு வேண்டாம் எம் பிள்ளைகளைத் தாருங்கள்

### அரச அதிபர் - காணாமற் போனோர் சங்கத்தினர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரச செயலகம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர், நேற்றைய தினம் மதியம் 1.30 மணியளவில் யாழ்.அரச அதிபர் பணிமனையில் வைத்து, யாழ். அரச அதிபர் பத்மநாதனுடன் கலந்துரையாடினர்.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் ஐம்பதிற்கும் மேற்பட்ட அங்கத்தவர்கள் அரச அதிபருடனான இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது, காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள்- தாம் பிரதமரையும், பாதுகாப்பு அமைச்சரையும் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்து தருமாறு கேட்டுக் கொண்டனர். அதற்கு அரச அதிபர், தாம் வெகு விரைவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும், பிரதமரின் செயலாளரையும் சந்தித்து, பிரதமரையும் பாதுகாப்பு அமைசசரையும் சந்திக்க நேரம் கேட்பதாகத் தெரிவித்ததுடன், யாழ். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் பிரதமருடனான இச்சந்திப்பின்போது கலந்து கொள்ள ஏற்பாடு செய்வதாகவும் உறுதியளித்தார்.

மேலும், காணாமற்போனவர்கள் தொழில் புரிந்து குடும்பத்தைப் பார்த்தவர்களாக இருந்தால், இவர்களின குடும்பங்களுக்கு சுய முயற்சிக்கடன் மற்றும் தையல் இயந்திரங்களை வழங்க ஏற்பாடு செய்வதாக அரச அதிபர் தெரிவித்த வேளை, காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் இதனை எதிர்த்து பெரும் சத்தத்துடன் அழுததுடன், எமக்கு இவைகள் வேண்டாம். எமது பிள்ளைகள்தான் வேண்டும் எனத் தெரிவித்தனர். இதற்கு அரச அதிபர்- தான் இவற்றைக காணாமற்போனவர்களின் இழப்பீடாகத் தரவில்லை அவர்கள் சார்ந்த குடும்பங்களின் வறுமை நிலையை



நீக்கவே இவற்றை வழங்குகின்றேன் என்றார்.

அததுடன் காணாமறபோனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் தாம் தொடர்ந்து மறியல் போராட் டத்தில் ஈடுபடப் போவதாகத் தெரிவித்த வேளை, அரசஅதிபர் தானும் இம்மறியல் போராட்டத்திற்கு ஆதரவு தருகிறேன். ஆனால செயலகப் பணிகளைப் பாதிக்காத வகையில் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினை மறியல் போராட்டத்தில் ஈடுபடுமாறு கேட்டுக்கொண்டார். (லி)

# வைகோவை விடுதலைசெய்யுமாறு பாரதீய ஜனதாக்கட்சி கோரிக்கை

(சென்னை)

'பொடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்டிருக்கும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச் செயலாளர் வைகோவை விடுவிக்குமாறு முதல் முறையாக பாரதீய ஜனதாக்கட்சி தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



பாரதீய ஜனதாக்கட்சியின் தமிழக சட்டப் பேரவை உறுப்பினர் கே.என்.லக்ஷ்மணன் இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஒஸ்லோவில் நடத்தப்பட்ட பேச்சுக்களின் முடிவு, புலிகள் மீண்டும் யுத்தத்துக்குச் செல்ல மாட்டார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது என்றும் கே.என். லக்ஷ்மணன் மேலும் தெரிவித்துள்ளார்.

மதிமுக தலைவர் வைகோ கைதான பின்னர் இதுவரையில் அவரை விடுதலை செய்யுமாறு எக் கருத்தையும் வெளியிட்டிராத பாரதீய. ஜனதாக் கட்சி முதன் முறையாக அவரை விடுவிக்குமாறு கோரியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள் இனிய நாள்

### 10-12-2002 - செவ்வாய்க்கிழமை

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மீ, - 24ஆம் திகதி**

*திதி* :- பூர்வபட்ச ஷஷ்டி மு.ப 10.31 வரை அதன் மேல் ஸப்தமி

*நட்சத்திரம்* :- அவிட்டம் - பகல் - 12.01வரை, அதன் மேல் சதயம்.

*ராகுகாலம்* :- 3.19 -4.49

*சுபநேரம்* :- 10.49 - 12.19

**மேடம்** :- தேகசுகம் நன்று,செய்தொழிலில் நல்ல லாபம், பெண்களினால் மகிழ்ச்சி, அறிஞர் உறவு, கல்வி முன்னேற்றம, வியாபாரம் முன்னேற்றம்.

**இடபம்** :- தேகசுகம் நன்று,பணம் வரவு, தொழில் ஸ்தானத்தில் நற்பெயர், சமூக சேவையில் மதிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று,பணம் வரவு,தெய்வ வழிபாடு, மன உற்சாகம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தூரப்பிரயாணம் தவிர்க்கவும்,புதிய முயற்சியில் ஈடுபடுவது நன்றல்ல,இரத்த அழுத்த நோயாளர் கவனமாக இருத்தல் வேண்டும், கல்வியில் முன்னேற்றம், வியாபார நிலை சமம்.

**சிங்கம்** :- தேகசுகம் நன்று,பணம் வரவு,மகிழ்ச்சி, கௌரவம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று,பணம் வரவு நன்று, எடுத்த காரியம் வெற்றி, நோய் நீக்கம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்**
**அவர்களின் சகோதரரின் புத்திரர்**
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- தேகசுகம் நன்று,பணம் வரவு, புத்திரர் மகிழ்ச்சி, பொது சேவையில் மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- மாதா தேக சுகக்குறைவு,போக்குவரத்தில் செலவு, பணவரவில் சிக்கல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம.

**தனு** :- தேகசுகம் நன்று, மன உற்சாகம், எடுத்த காரியம் வெற்றி, நோய் நீக்கம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- பணவரவு குறைவு, மனச்சஞ்சலம், செலவு தேடிவரும், இருதலைக் கொள்ளிபோல் நிற்க வேண்டிய நிலை, கல்வி முன்னேற்றம், வியாபாரம் சமம்.

**கும்பம்** :- தேகசுகம் நன்று,பணம் வரவு, நண்பர்கள், உறவினர்கள் சங்கடம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முனனேற்றம்.

**மீனம்** :- தேகசுகக் குறைவு, மனஸ்தாபம், கர்வம், வீண்செலவு, கல்வி முன்னேற்றம், வியாபாரம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யாழில் இயல்பு வாழ்க்கைக்கு வழிவிட இராணுவம் மறுக்கிறது

## கேணல் கருணா ஒஸ்லோவில் பேச்சு

(ஒஸ்லோ)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட டதன் பின்னர் எல்லா இடங்களிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டபோதும யாழ். குடாநாட்டில் தற்போதும் நிலமை மோசமாகவே இருப்பதாக விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணா ஒஸ்லோவில் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் நடைபெற்ற மாவீரர் நாள் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்

பல்லாயிரக்ககணக்கான மக்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில்- அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரும் பங்கேற்றனர்.




அங்கு தொடர்ந்து உரையாற்றிய கேணல் கருணா -

எல்லா இடங்களிலும் இராணுவ அட்டகாசங்கள் , அச்சுறுத்தல்கள், அடாவடித்தனங்கள் வெகுவாகக் குறைந்திருப்பதாகவும், தமது ஆக்கிரமிப்பு நிலங்களை படையினர் பல இடங்களில் கைவிட்டிருப்பதாகவும் கூறினார்.

ஆனால், யாழ். குடாநாட்டில் உள்ள இராணுவத் தலைமை கடும் போக்குடன் நடந்து கொள்வதாகவும், மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு வழிவிட அது மறுத்துவருவதாகவும், இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியம் பற்றி நோர்வே பேச்சுக்களில் அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டதாவும் தெரிவித்தார்.

## கனடா மொன்றியலில் மாவீரர் தின நிகழ்வு



### விடுதலை...

ஒத்துழைப்பையும் பங்கினையும் பாராட்டினர்

இச் சந்திப்பின்போது - சுவிற்சர்லாந்து நாட்டின் சமஷ்டி முறைமை, அதிகாரப்பரவலாக்கம், உள்ளக நிர்வாகம் ஆகிய விடயங்களை அறிந்து கொள்வதில் விடுதலைப் புலிகள் ஆர்வம் காட்டியதாக சுவிற்சர்லாந்து வெளி விவகார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுபற்றிய - முழுமையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளை அடுத்த வருடமும் தமது நாட்டிற்கு விஜயம் செய்ய வருமாறு சுவிற்சர்லாந்து அப்போது அழைப்பு விடுத்தது.

இச்சந்திப்பு பற்றிக் கருத்து வெளியிட்ட சுவிற்சர்லாந்து வெளி விவகார அமைச்சு - மனித உரிமைகள் விடயத்திலும், நல்லாட்சியிலும் பேச்சுக்களில் ஈடுபடும் இரண்டு தரப்பு சம அந்தஸ்து பெறுவதான திட்டத்தை தாம் வரவேற்பதாக தனது உத்தியோகபூர்வ அறிவிப்பில் தெரிவித்தது.

### புலிகள்...

ரிகா, அமைச்சர்கள் பீரிஸ், மொறகொட, ஹக்கீம் ஆகியோரைச் சந்தித்தார்.

இலங்கையின் தற்போதைய அரசியல் நிலமை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுடன் அவர் கலந்துரையாடினார். சமாதானப் பேச்சுவார்த்தையில் இந்தியாவின் தலையீட்டை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்க முடியாது என்றும் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறிய அவர், இலங்கைக்கு ஏனைய உதவிகளை இந்தியா வழங்குவதற்குத் தயாராக இருக்கின்றது என்றும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

அதேவேளை, தற்போதைய அரசியல் நிலமை தொடர்பாக கன்வால் சிபாலுக்கு எடுத்து விளக்கிய ஜனாதிபதி சந்திரிகா- விடுதலைப் புலிகள் முற்றுமுழுதாக ஆயுதங்களைக் கீழே வைப்பதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தனக்குத் திருப்தி இல்லை என்றும் ஜனாதிபதி சந்திரிகா கன்வால் சிபாலிடம் கருத்துத் தெரிவித்தார்

நேற்றுக்காலை ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த கன்வால் சிபால், தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து அவரிடமும் கேட்டறிந்து கொண்டார். நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் இடம்பெறும் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு இந்திய அரசாங்கம் உதவி வழங்க வேண்டும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார். சமாதானப் பேச்சுவார்த்தைகளை இந்தியா உன்னிப்பாக அவதானித்து வருகின்றது. பேச்சுவார்த்தை வெற்றியளிக்க வேண்டும் என்பதே இந்தியாவினதும் இந்திய மக்களினதும் விருப்பமாகும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் எடுத்துக்கூறிய கன்வால் சிபால், விடுதலைப்புலிகள் மீது இந்தியா விதித்துள்ள தடையின் காரணமாக சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு மேலதிகமான உதவிகளை வழங்க முடியாதிருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்தியா தன்னாலான உதவிகளை வழங்கும் என்றும் அவர் பிரதமரிடம் உறுதியளித்தார்.

M.A காமராஜர் பல்கலைக்கழகம் [மதுரை]

✦ இப்பட்டத்திற்கான பாடநெறிக்கு பட்டதாரிகள் மட்டுமன்றி வேறு தகைமைகள் உள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும். இது தொடர்பான விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

✦ இதற்குரிய பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தில் 10-12-2002 இலிருந்து செய்து கொள்ள முடியும்.

✦ இதற்குரிய விரிவுரைகள் ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாக உள்ளன.



விபரங்களுக்கு-
இணைப்பாளர்,
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(சி-291)

# பொடா சட்டத்துக்கு எதிராக வைகோ வழக்குத் தாக்கல்

## மத்திய, தமிழக அரசுகளிடம் நீதிமன்று விளக்கம்

(சென்னை)

இந்தியாவின் பயங்கரவாதத் தடைச்சட்டமான பொடா சட்டத்திற்கு எதிராக ம.தி.மு.க தலைவர் வை.கோபாலசாமி தாக்கல் செய்த மனுவைத் தொடர்ந்து இந்திய உச்ச நீதிமன்றம் மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்கும் விளக்கம் கோரி ஆணை அனுப்பியுள்ளது.

இத்தடைச்சட்டத்தின் அரசியலமைப்புப் பெறுமதி குறித்துக் கேள்வி எழுப்பியே வை.கோ இம்மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு கொடுத்த குற்றச்சாட்டின் பேரிலேயே வைகோ கடந்த ஜுலை மாதம் பொடா தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது வைகோ சார்பாக ஆஜரான வழக்கறிஞர்- இலங்கை மக்களுக்கு ஆதரவாக வைகோ பேசியது பயங்கரவாதமல்ல, நாடாளுமன்றக் கூட்டங்களில் பேசிய வற்றையே மக்கள் மத்தியில் வைகோ பேசியதாகவும் இது சட்டப்படி குற்றமல்ல என்றும் வாதடினார். இதையடுத்தே நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தது.

### மனித உரிமை...

நிலையை அரசு வெளிப்படுத்தக் கோரியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கி, இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள அப்பாவித் தமிழ் இளைஞர் யுவதிகளை அரசு விடுதலை செய்யக் கோரியும், கைது செய்யப்பட்டு விசாரணைகள் ஏதுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் அப்பாவி இளைஞர் யுவதிகளை விடுதலை செய்யக் கோரியும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தை துரிதமாகவும் அமுல்படுத்தக் கோரியும் இன்று ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு யாழ அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்திலிருந்து பேரணியாக, சோமசுந்தரம் வீதியிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத் திற்குச் சென்று அங்கு மகஜர் ஒன்றும கையளிக்கப்படவுள்ளது. (லி)

### அதிகாரப் பரவல்...

ஐ.நாவுக்கு அமைவான சமஷ்டி அமைப்பிற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இணக்கம் தெரிவித்திருப்பது இந்தப் பேச்சுக்களின் விசேட அம்சமாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் தனிநாட்டுக் கோட்பாட்டில் இருந்து முற்றாக விலகியிருக்கின்றது.

சமஷ்டி அமைப்பில் அரசியல் யாப்புக்கு அமையவே அதிகாரங்கள் பரவலாக்கப்படும். இந்த அமைப்பு நிராகரிக்கப்பட்டால் யுத்தம் தவிர வேறு மார்க்கம் கிடையாது.

சமஷ்டி அமைப்புக்கான இணக்கப்பாடு சமாதானத் திட்டத்துக்கான முதற்படிக்கல் என்றார்.

சமஷ்டி அமைப்பு இலங்கைக்குப் புதிதான ஒன்றல்ல. இது தமிழ் மக்களுக்காகவல்ல. மலைநாடு மற்றும் சிங்கள மக்களுக்காகவும் அமைக்கப்படவுள்ளது. பண்டாரநாயக்க - செல்வநாயகம், டட்லி சேனநாயக்க உடன்படிக்கையில் சமஷ்டி அமைப்பு அடிப்படையிலான தீர்வு பற்றிக் கூறப்பட்டுள்ளது. 2000ம் ஆண்டு ஒகஸ்ட் மாத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் யாப்பு நகல் சட்டமூலத்திலும், 95ஆம் ஆண்டும்- சமஷ்டி அரசியல் பற்றிக் கவனம் செலுத்தப்பட்டது. அந்தச் சந்தர்ப்பங்களில் விடுதலைப் புலிகள் பங்குபற்றாமையே ஒரே ஒரு வேறுபாடாகும் என்றும் அமைச்சர் பீரிஸ் கூறினார்.

மற்றுமொரு பொதுத் தேர்தலை எதிர் நோக்குவதற்கு அரசாங்கம் அஞ்சவில்லை. அவ்வாறு நடக்குமானால் அரசாங்கம் மேலும் கூடுதலான ஆசனங்களைப் பெறும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உள்ளக சமஷ்டி ஆட்சி முறைமையுள்ள தீர்வொன்றை சிலாகித்திருக்கின்றார்கள். சமஷ்டி ஆட்சி முறை இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவதற்கு முன்னோடியாகப் பிரிட்டிஷ் ஆட்சியாளர், டொனமூர் ஆணைக் குழுவொன்றை நியமித்து இங்குள்ள பல்வேறு சமூகத்தினரின் கருத்துக்களைப் பெற்றார்கள். அப்போது, கண்டியச் சிங்களவர்கள் சமஷ்டி ஆட்சி முறை இலங்கைக்கு பொருத்தமானது என்று யோசனை தெரிவித்தார்கள். ஆகவே, சமஷ்டி முறை இலங்கைக்கு புதியது அல்ல என்று அமைச்சர் விளக்கம் தந்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் 2000 ஆம் ஆண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற அடிப்படையிலேயே அதனைத் தயாரித்தது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர், சமஷ்டி முறையை அடிப்படையாகக் கொண்ட புதிய அரசியல் யாப்பைத் தயாரிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருகின்றது.

தற்போதைய அரசியல் சட்டத்தை திருத்தி சமஷ்டி ஆட்சி முறையைப் புகுத்த முடியாது. மத்திய அரசாங்கத்தின் கீழ் குவிந்திருக்கும் அதிகாரங்களைப் பங்கீடு செய்வதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும். ஐக்கிய இலங்கைக்குள் புலிகள் இயக்கம் சமஷ்டி ஆட்சி முறையைக் கோரியிருக்கின்றது. புலிகளின் தலைவர் தனது மாவீரர் தின உரையில் குறிப்பிட்ட விடயங்களும் அதனைத்தான் எடுத்துக்காட்டுகின்றன. அடுத்த பேச்சுவார்த்தையில் சமஷ்டிமுறை குறித்தே பேசவுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர்,

ஜனவரி மாதம் 6 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதிவரை அந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறும் என்றும் சொன்னார்.

அதிகாரப் பரவலாக்கம்,மனித உரிமைப் பிரச்சினைகளுக்கும் அந்தப் பேச்சுவார்த்தையில் முக்கியததுவம் கொடுக்கப்படும் என்றும் அமைச்சர் பீரிஸ் நேற்றுத் தெரிவித்தார்.

### ஹக்கீம்....

கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இக்கூட்டத்தில் புதிய தெரிவுகள் நடைபெறவிருந்தது. பொதுச் செயலாளர் பதவிக்கு ஹசன் அலி தெரிவுசெய்யப்படலாம் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. (01,08)

### நாடாளுமன்ற...

வந்தார். நாடாளுமன்ற நிலையியல் சட்டத்தின்படி வெளிநாட்டவர் எவருக்கும் நாடாளுமன்ற அமர்வுகளில் அனுமதி வழங்கக்கூடாது என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அனுரா பண்டாரநாயக்கா எழுந்து, 1991ஆம் ஆண்டு ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது, திருமதி ஹேமா பிரேமதாசா நாடாளுமன்றத்துக்கு வருகை தந்த சமயம், அமர்வுகளின் போது உள்ளே அமர்ந்திருக்க அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனவே, தற்போது வெளிநாட்டு பிரஜைகளுக்கு எப்படி அனுமதி வழங்கப்பட்டது என்று கேள்வி எழுப்பினார். இதனைத் தொடர்ந்து சபையில் முப்பது நிமிடம் வரை சலசலப்பு நிலவியது.

தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சபையில் உரை நிகழ்த்தினார். தனது அனுமதியுடனும், சபாநாயகரின் அனுமதியுடனும்தான், மேற்படி இரு வெளிநாட்டவரும் சபைக்கு வந்ததாகவும், இவர்கள் இருவரும் தமது அமைச்சின் பாதுகாப்பு விடயங்கள் தொடர்பான ஆலோசனைக் குழு அங்கத்தவர்கள் என்றும் தெரிவித்தார். எனினும், அவர்கள் எந்த நாட்டவர்கள் என அவர் கூறவில்லை. இதனைத் தொடர்ந்து சபையில் எழுந்த சர்ச்சை தணிந்தது. (01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.